பக்கங்கள்: பன்னிரண்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 04 திங்கட்கிழமை (17~05~2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:174

17 MAY 2004
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

## சமாதான முயற்சிகள் தொடர்பான

# பொது உடன்பாட்டு அறிக்கையை இறுதிசெய்வதில் நோர்வே மும்முரம்

### புலிகளுடனும் அரசுடனும் மாறி மாறி ஒஸ்லோ தொடர்பு
### நாளைக்கு முன் அது வெளியாகுமா என்பதில் உறுதியில்லை

லண்டன்,மே17

**ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான இணக்க நிலை உருவாகியிருப்பதை உறுதிப்படுத்தும் பொது உடன்பாட்டு அறிக்கை ஒன்றை இறுதிசெய்யும் முயற்சியில் அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பு மும்முரமாக ஈடுபட்டி ருக்கின்றது.**

**இது தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்புடனும் அரசுடனும் ஒஸ்லோவில் உள்ள அந்நாட்டு அரசுப் பிரதிநிதிகள் மாறிமாறித் தொடர்புகொண்டு வருகின்றனர்.**

**நாளை பிரதிச் சபாநாயகர் தெரிவுக்காக நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னர் அத்தகைய அறிக்கையை நோர்வே வெளியிட்டுவிடுமா என்பது குறித்து உறுதியான பதிலைத் தரமுடியாத நிலையே காணப்படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.**

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு இருதரப்பும் இணக்கம் கண்ட விடயங்களை உள்ளடக்கிய தான பொது உடன்பாட்டு அறிக்கை ஒன்றை நோர்வே விரைவில் வெளியிடும் என்ற செய்தி ஏற்கனவே வெளியாகியிருந்தது தெரிந்ததே.

கடந்த வியாழனன்று கிளிநொச்சியில் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கத்தையும் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் சந்தித்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோர் கொழும்பு திரும்பியதும் அன்றிரவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் நிபுணர் இன்று கிளிநொச்சி வருகிறார்

கிளிநொச்சி,மே17

சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவரும் மனித உரிமைகள் தொடர்பான விவகாரங்களில் நிபுணத்துவம் பெற்றவருமான இயன் மார்டின் இன்று கிளிநொச்சி வருகின்றார்.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை அவர் முற்பகல் 10 மணிக்குச் சந்தித்துக் கலந்துரையாடுவார்.

விடுதலைப் புலிகள் மனித உரிமைகளை மீறுவதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் அவர் தமிழ்ச்செல்வனுடன் பேசுவார் எனக் கூறப்பட்டது.

கடந்த ஐ.தே.முன்னணி அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களின்போது அமைக்கப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான உபகுழுவில் இயன் மார்டீன் இடம்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-3)

## றக்கா வீதியில் கிடந்த சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம்,மே17

யாழ். கச்சேரி - நல்லூர் வீதிக்குச் சமீபமாக றக்கா வீதியில் நேற்று அதிகாலை கைகள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட ஆணின் சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது.

யாழ். ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்த ரதன் என அழைக்கப்படும் சுப்பிரமணியம் சந்திரலலித் (வயது 22) என்பவரின் சடலமே அதுவென அவரது மனைவியான ஜீவதர்சினி (வயது 20) அடையாளம் காட்டினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அகாஷி–சம்பந்தன் சந்திப்பு

வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் கோருகின்ற இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஒன்று உடனடியாக ஏற்படுத்தப்படவேண்டும் என தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் இலங்கைக்கான ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூஷி அகாஷியிடம் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவரின் இல்லத்தில் யசூசி அகாஷியை நேற்றுக் காலை சந்தித்துப் பேசிய போதே இரா.சம்பந்தன் இக்கோரிக்கையை வலியுறுத்தினார்.

சிங்களப் பேரினவாத அரசுகள் காலத்துக்குக் காலம், தமிழ்ச் சமூகத்தை ஏமாற்றியே வருகின்றன. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்கின்ற விடயத்தில் அவை அசமந்தப்போக்கையே கடைப்பிடித்து வந்தன. அந்தப் போக்குக்கு சர்வதேச சமூகம் இனிமேலும் அனுமதிக்கக்கூடாது எனவும் சம்பந்தன் குறிப்பிட்டார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினை குறித்து விளக்கும் வகையில்

# தமிழக அரசியல் பிரமுகர்களுடன் ஈழத் தமிழ்த் தலைவர்கள் சந்திப்பு

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக மலையக மக்கள் முன்னணியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் சேர்ந்த தூதுக்குழுவினர் எதிர்வரும் ஜூலை மாத இறுதியில் தமிழக அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவர்.

இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பியுமான பெ.சந்திரசேகரன் தமிழகத்தில் வைத்துத் தெரிவித்திருக்கின்றார்.

சந்திரசேகரன் எம்.பியின் தற்போதைய தமிழக விஜயம் தொடர்பாக அவரது செய்திப்பிரிவு மேலும் தெரிவித்திருப்பதாவது:-

சந்திரசேகரன் நேற்றுமுன்தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் மு.கருணாநிதியையும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்

(12ஆம் பக்கம் பார்க்க)



# தமிழ் நாட்டில் மீண்டும் நாங்கள் கால்பதிக்கும் சூழல் உருவாகும்

## 'விடுதலை' வெளியீட்டு விழாவில் புலிகள் பிரமுகர் பாலகுமாரன்

யாழ்ப்பாணம்,மே17

பொதுவாக இந்தியாவிலும் குறிப்பாக, தமிழ்நாட்டிலும் இப்போது வரலாறு திரும்பிக்கொண்டிருக்கின்றது. வரலாறு காணாத முடிவு கடந்த தேர்தலில் ஏற்பட்டிருக்கின்றது.

இந்த வரலாற்று முடிவுக்கு ஈழத் தமிழர்கள் சிந்திய கண்ணீர் - அடைந்த துன்பம் - எங்களுடைய அவலங்கள் எல்லாம் ஒரு காரணமாக அமைந்திருக்கின்றன.

எனவே, இந்த மாற்றத்தின் மூலம் நாங்கள் அனைவரும் மீண்டும் தமிழ்நாட்டில் கால்வைக்கக்கூடிய ஒரு சூழல் விரைவில் ஏற்படும்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் கா.வே.பாலகுமாரன்.

விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'விடுதலை' நூலின் வெளியீட்டு விழா நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பாலகுமாரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் ஜெயலலிதாவைக்கூட எதிரியாகப் பார்க்கவில்லை. அவரும் திருந்திவிடுவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. எம்.ஜி.ஆர். எமது போராட்டத்தை வளர்ப்பதற்கு எவ்வளவு தூரம் உந்துசக்தியாக இருந்தார் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். அந்தவகையிலே, எம்.ஜி.ஆரின் விசுவாசி என்று சொல்கின்ற ஜெயலலிதா எம்.ஜி.ஆரின் கடைசி

(12ஆம் பக்கம் பார்க்க)

இப்போது 9000/-

தங்க





தேசிய சேமிப்பு வங்கியின் ரன்சஹான அடகுச் சேவையில் இப்போது ஒரு பவுனுக்கு ரூ.9000/-

- மாதாந்த வட்டி 1.25% • இலகு அடிப்படையில் மீட்டெடுப்பதற்கான வசதி
- துரித சேவை • இரகசியமாக இருக்கும்
- தங்க ஆபரணங்களுக்கு அரச வங்கியின் உத்தரவாதம்
- தங்க ஆபரணங்கள் சுரண்டிப் பார்க்கப்படமாட்டாது
- நாடெங்கிலும் 100 கிளைகள்

NSB

NSB தேசிய சேமிப்பு வங்கி





விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'விடுதலை' நூல் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்நிகழ்வில் லெப். அர்ச்சுனாவின் தந்தை சதாசிவம் பொதுச் சுடர் ஏற்றுவதனையும் சர்வதேச மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன் தேசியக்கொடி ஏற்றுவதையும், நூலின் முதற்பிரதியை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பாவிடமிருந்து யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.மோகனதாஸ் பெற்றுக்கொள்வதையும் மேலுள்ள மூன்று படங்களிலும் - கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை, யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் கீழுள்ள படங்களிலும் காணலாம். *(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் கர்ப்பிணி சடலமாக மீட்பு!

## இணுவில் காரைக்காலில் சம்பவம்

யாழ்ப்பாணம்,மே17

இணுவில் காரைக்கால் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் பெண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அவரது கணவன் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். அதேயிடத்தைச் சேர்ந்த குமாரதாஸ் விஜயகௌரி (வயது 31) என்ற கர்ப்பிணிப் பெண்ணே இவ்வாறு அவரது வீட்டில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் பதில் நீதிவான் ப.வசந்தசேனன் அங்கு விசாரணைகளை நடத்தினார்.

மரணமான தமது தாயாருக்கும் தகப்பனாருக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு சண்டை நடந்தது என்றும் -

தாயாரை அடித்து அவரின் கழுத்தில் கயிற்றைக் கட்டித் தூக்கிலிட்ட தந்தை பின்னர் வெளியில் சென்றுவிட்டார் என்றும் -

உயிரிழந்தவரின் ஐந்து வயது நிரம்பிய மகன் நீதிவானிடம் தெரிவித்தார்.

மரணத்தில் சந்தேகம் கொண்ட நீதிவான் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

மரண விசாரணையை இன்று காலை வரை ஒத்திவைத்த நீதிவான், மரணமானவரின் கணவனைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டார்.

இதையடுத்து அவரைக் கைது செய்த பொலீஸார் தடுத்துவைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இன்று நீதிவான் முன் அவர் ஆஜர் செய்யப்படுவார்.

உயிரிழந்தவருக்கு இருபிள்ளைகள் உண்டு. (எ-3-6-9-15)

# மயிலங்காட்டில் வீதியோரமாக குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!

ஏழாலை,மே17

ஏழாலை தெற்கு, மயிலங்காட்டுப் பகுதியில் வீதியோரமாகக் கிடந்த சடலம் ஒன்றைச் சுன்னாகம் பொலீஸார் நேற்று நண்பகல் மீட்டுள்ளனர்.

அதேயிடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கு.அருமைத்துரை என்பவரின் சடலமே இது எனப் பின்னர் அடையாளம் காணப்பட்டது.

மல்லாகம் பதில் நீதிவான் ப.வசந்தசேனன் சம்பவ இடத்துக்கு நேற்று சென்று சடலத்தைப் பார்வையிட்டார்.

சம்பவம் குறித்து பதில் நீதிவான் கேட்டறிந்த பின்னர், சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

மரண விசாரணை இன்று மல்லாகம் நீதிமன்றில் இடம்பெறவிருக்கின்றது.

பிரஸ்தாப நபர் வேறொருவரால் அழைத்துச்செல்லப்பட்டிருந்தார் என்றும் -

அதன் பின்னரே அவர் சடலமாக மீட்கப்பட்டார் என்றும் - கூறப்பட்டது.

இதற்கிடையில், இந்த மரணம் குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன என்றும் -

இதனையடுத்து தாம் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் - சுன்னாகம் பொலீஸார் தெரிவித்தனர். (எ-3)

# கொட்டன் அடிக்கு இலக்கானவர் ஆறுநாள்களின் பின்னர் மரணம்!

யாழ்ப்பாணம்,மே17

பளைப் பகுதியில் கடந்த 10ஆம் திகதி தனிப்பட்ட தகராறு ஒன்றின் போது கொட்டன் அடிக்கு இலக்கானதாகக்கூறி யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த நபர் 6 நாள்களின் பின்னர் நேற்று அதிகாலை மரணமானார்.

பளை, கரந்தாய்ப் பகுதியைச் சேர்ந்தவரான மூத்ததம்பி இராசையா (வயது 52) என்பவரே படுகாயமடைந்து சிகிச்சைக்குட்படுத்திய நிலையில் மரணமானார்.

இந்த மரணம் குறித்து யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் மரண விசாரணைகளை நேற்று நடத்தினார்.

இறந்தவரின் மகன், மைத்துனன் ஆகியோரின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்த நீதிவான், சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய பின் உறவினர்களிடம் கையளிக்கும்படி உத்தரவிட்டார். (எ-3-15)

# எதிரும் புதிருமாக இரு முஸ்லிம்களை போட்டிக்கு நிறுத்துவதற்கு முஸ்தீபு!

## குழுக்களின் பிரதித் தலைவர் பதவிக்கு

நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவிக்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பிலும், ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான எதிர்த்தரப்பு சார்பிலும் முஸ்லிம் எம்.பிக்களைப் போட்டிக்கு நிறுத்துவதற்கு அவ்விருதரப்பும் தீர்மானித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

எதிர்க்கட்சி சார்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும், தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ரி.ஹஸன் அலியைக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவிக்கு நிறுத்துவதற்கு ஐ.தே.க. ஏற்கனவே தீர்மானித்துவிட்டது. இதனையடுத்து அரசின் சார்பில் தேசிய ஐக்கிய முன்னணியின செயலாளர் நாயகமும, ஊடகத்துறை பிரதி அமைச்சருமான எம்.எச்.சேகு இஸ்ஸதீனை அப்பதவிக்குப் போட்டியிட வைப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உயர் பீடத்தில் ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ஒருவரின் பெயரை குழுக்களின் பிரதித் தலைவர் பதவிக்குப் பிரேரிப்பதற்கு எதிர்க்கட்சிகள் தீர்மானித்திருப்பதாலும், ஜே.வி.பி. உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மீது சிறுபான்மையினர் கொண்டிருக்கின்ற அவநம்பிக்கையைக் களைவதற்கும் சேகு இஸ்ஸதீனை அப்பதவிக்குப் போட்டியாக நிறுத்துவது உதவும் எனச் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் கூடுகிறது. இதன்போது பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித்தலைவர் பதவிகளுக்கான வாக்கெடுப்பு நடக்க இருக்கிறது. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி - இருதரப்பிலும் குழுக்களின் பிரதித்தலைவர் பதவிப் போட்டிக்கு முஸ்லிம்களே நிறுத்தப்பட்டால் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட ஹெல உறுமய வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது என எதிர்பார்க்கப்படுகிறது.

ஹெல உறுமய வாக்களிப்பில் கலந்துகொள்ளாத அதேவேளை, எதிர்க்கட்சிப் பிரதிநிதிக்கு தமிழரசுக் கட்சியின் ஆதரவு கிடைக்குமாயின் எம்.ஏ.ஹஸன் அலி குழுக்களின் பிரதித்தலைவராகத் தெரிவுசெய்யப்படுவார். தமிழரசுக்கட்சியும் வாக்களிப்பில் கலந்துகொள்ளாது நடுநிலை வகித்தால் அரசு தரப்பு பிரதிநிதியே வெற்றிபெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-க)

# மர்மநபர்களுடன் இராமேஸ்வரத்துக்கு இலங்கையிலிருந்து வந்த மீன்பிடிப்படகு!

இலங்கையில் இருந்து இராமேஸ்வரத்திற்கு வந்து சேர்ந்ததாகக் கருதப்படும் மீன்பிடிப்படகு ஒன்று குறித்து இந்திய அதிகாரிகள் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையைச் சேர்ந்த மீன்பிடிப் படகு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை இரவு இராமேஸ்வரம் சேரன் கோட்டைக் கடற்கரைப் பகுதிக்கு வந்துள்ளது. படகில் இருந்து இறங்கிய சிலர் அதில் கொண்டுவந்த சில பொருள்களுடன் இராமேஸ்வரம் நகருக்குள் சென்றுவிட்டனர்.

நள்ளிரவில் படகில் இருந்து இறங்கிச் சென்ற நபர்களைப் பார்த்த மீனவர்கள் சனிக்கிழமை காலையில் கடற்கரையில் ரோந்து சென்ற இந்தியக் கடலோரக் காவல்துறையினரிடம் இது குறித்துத் தகவல் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து சேரன்கோட்டைக் கடற்கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருந்த - இலங்கையைச் சேர்ந்தது எனக் கருதப்படும் - சம்பந்தப்பட்ட படகை இந்தியக் கடற்படையினர் கைப்பற்றி இராமேஸ்வரம் கடற்படை முகாமுக்குக் கொண்டு சென்றனர். அப்படகில் வந்தவர்கள் பற்றிய விசாரணைகளைக் கடற்படையினர், கடலோரக் காவற்படையினர் மற்றும் தமிழகப் பொலீஸார் ஆகியோர் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது. (எ-க)

## விபத்து மற்றும் மோதல்கள் அதிகரிக்கின்றன:

# 24ஆம் 'வார்ட்' கட்டில்கள் காயக்காரர்களால் நிறைகின்றன

குடாநாட்டின் பல பாகங்களிலும் இடம்பெற்றுவரும் ஆள்களை வெட்டிக் காயப்படுத்தும் சம்பவங்களிலும், வாகன விபத்துக்களின் போதும் காயப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இவ்வாறான சம்பவங்களில் காயப்படுவோர் மேலதிக சிகிச்சையின் பொருட்டு யாழ்.வைத்தியசாலைக்கே எடுத்துவரப்படுகின்றனர். இதனால் அங்கு இடநெருக்கடி மிக மோசமாக ஏற்பட்டுவருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பல இடங்களிலும் ஏற்பட்டுவரும் சம்பவங்களில் காயமடைவோர் உடனடியாக யாழ். வைத்தியசாலையின் 24ஆம் வார்ட்டிற்கே எடுத்துவரப்படுகின்றனர். இதனால் அங்கு பெரும் இடநெருக்கடி ஏற்பட்டு வருகின்றது.

குறிப்பிட்ட 'வார்ட்' குறைந்தளவு கட்டில்களைக் கொண்டுள்ள நிலையில் நேற்று வரை 50இற்கும் மேற்பட்டோர் அங்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான இடநெருக்கடி காரணமாகப் பலர் வார்ட்டின் வெளிவிறாந்தைகளிலும் தங்கியுள்ளனர். இந்த வார்ட்டில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவோரில் 75 வீதமானோர் ஆண்களாகவே உள்ளனர். கடந்த வெள்ளியும், நேற்றுமுன்தினமும் குடாநாட்டின பல பாகங்களிலும் இடம்பெற்ற பரவலான வாள் வெட்டுச் சம்பவங்களில் மட்டும் பத்துப் பேர் காயமடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-6)

# கைக்குண்டுடன் சிப்பாய் கைது!

கம்புறுபிட்டியவில் நேற்றுமுன்தினம் இரவு கைக்குண்டுடன் பஸ்ஸில் பயணம் செய்தவர் எனக் கருதப்படும் இராணுவச் சிப்பாய் ஒருவர் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டார்.

தாக்குதலொன்றை மேற்கொள்வதற்காகச் சென்றுகொண்டிருந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் இராணுவச் சிப்பாய் ஒருவர் தொடர்பாகப் பொலீஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்தே இவர் கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டார்.

. சம்பந்தப்பட்ட இராணுவச் சிப்பாய் விடுமுறையில் வந்திருந்தவர் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. கம்புறுபிட்டிய பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கட்சித் தலைவர்கள் கூட்டம் இன்று

புதிய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களின் முதலாவது கூட்டம் இன்று காலை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெறும். சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் நாளைய நாடாளுமன்ற அமர்வுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. (எ-க)

# இந்தியாவின் புதிய அரசாங்கம் நாளை சோனியா தலைமையில் பதவி ஏற்கும்

புதுடில்லி,மே17

இந்தியாவில் ஆட்சி அமைக்கும் கடைசி நேரத்தீவிரத்தில் காங்கிரஸ் கட்சி இருக்கிறது. அநேகமாக நாளை செவ்வாய்க்கிழமை புதிய அரசு பதவியேற்கும் என்று தெரிகிறது. புதிய பிரதமராக சோனியா காந்தி பதவியேற்பார்.

ஆட்சி அமைக்கும் முயற்சியாக கடந்த சில நாள்களாக சோனியா காந்தி கூட்டணிக்கட்சிகளின் தலைவர்களுடனும் மதசார்பற்ற கட்சிகளின் தலைவர்களுடனும் தொடர்ச்சியான பேச்சுக்களை நடத்திவந்தார். அந்தப் பேச்சுக்கள் வெற்றியளித்துள்ளன. குறைந்தது 300 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்குமென்று காங்கிரஸ் கருதுகிறது. ஆட்சி அமைப்பதற்கு 272 உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்தாலே போதுமானது.

முன்னதாக காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றக்குழுத் தலைவராக சோனியாகாந்தி நேற்றுமுன்தினம் ஏகமனதாகத் தெரிவு செய்யபட்டார். ஒரு கட்சியின் நாடாளுமன்றக்குழுத் தலைவரே நாட்டின் பிரதமராக வரமுடியும் என்பதால் சோனியா பிரதமராக வருவதற்கு வசதியாக அவர் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சோனியா தலைமையில் காங்கிரஸ் ஆட்சி அமைக்க அதன் கூட்டணிக்கட்சிகளும் மதசார்பற்ற ஏனைய கட்சிகளும் தமது ஆதரவைத் தெரிவித்து விட்டன. லல்லு பிரசாத் யாதவின் ராஷ்ட்ரிய ஜனதாதளம், ராம்விலாஸ் பாஸ்வானின் லோக்ஜனசக்தி, முப்தி முகமது சயீத்தின் மக்கள ஜனநாயக்கட்சி, சிவ்சோனின் ஜார்க் கண்ட முக்தி மோட்சா, தெலுங்கான ராஷ்ட்ட சமிதி ஆகிய கட்சிகள் ஆதரவுச் கடிதம் கொடுத்துவிட்டன. தேசியவாதக் காங்கிரஸ் கட்சியும் ஆதரவு தெரிவித்துளளது.

தமிழகத்தில் இருந்து தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி நேற்று புதுடில்லி போய்ச்சேர்ந்தார். சோனியாவைச் சந்தித்து அவர் தமது கட்சியின் ஆதரவைத் தெரிவித்தார். தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. ஆகிய கட்சிகளும சோனியாவின் ஆட்சிக்கு ஆதரவு தெரிவித்து ஏற்கனவே கடிதங்கள் கொடுத்துள்ளன. நேற்று மாலை காங்கிரஸ் கூட்டணிக்கட்சிகள் அனைத்தும் கூடி தமது தலைவராக சோனியாவை சம்பிரதாய பூர்வமாக தேர்தெடுத்தன.

சோனியா இன்று ஜனாதிபதி கலாமைச்சந்தித்துப் பேசுகிறார். ஆட்சி அமைப்பதற்கான உரிமையை வழங்கும்படி அப்போது அவர் கேட்பார். ஆதரவு தரும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடிதங்களையும் அவர் சமர்ப்பிப்பார். இதனை அடுத்து ஜனாதிபதி அவரை ஆட்சி அமைக்குமாறு கேட்பார். நாளை செவ்வாய்க்கிழமை சோனியா பிரதமராகப் பதவியேற்றுக் கொள்வார்.

இதேவேளை -

காங்கிரஸ் கூட்டணி அமைச்சரவையில் கம்யூனிஸ்ட் கட்சி சேர புதிய நிபந்தனை விதித்துள்ளது. சமாஜ்வாதிக் கட்சித் தலைவர் முலாயம் சிங்யாத வையும் அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அது வலியுறுத்தியுள்ளது.

அதேசமயம் தி.மு.க. இப்போதைக்கு காங்கிரஸ் அமைச்சரவையில் சேர்வதில்லை என்று முடிவெடுத்துள்ளது. ஆனால், பா.ம.க. அமைச்சரவையில் சேரும். நேற்றுமுன்தினம் சென்னையில் கூடிய தி.மு.க. செயற்குழு அமைச்சரவையில் சேர்வதில்லை என்ற முடிவை எடுத்தது. கம்யூனிஸ்ட் கட்சிகள் சில அமைச்சரவையில் சேர்வதென்றும் வேறுசில அமைச்சரவையில் சேர்வதில்லை என்றும் முடிவு செய்துள்ளன.

(ஐ-க)



நேற்று புதுடில்லி சென்ற தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி அங்கு காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தியை சந்தித்துப் பேசினார்.

## ஏராளம் ஏவுகணைகளை தயாரிக்கிறது வடகொரியா

வடகொரியா அதிநவீன ஏவுகணைகளை ஏராளமாகத் தயாரித்து வருகிறது. அவற்றை பாதாள அறையில் பதுக்கி வைத்திருக்கிறது என்று தென கொரிய செய்தித்தாள் செய்தி வெளியிட்டுள்ளது.

இரு இடங்களில் பாதாள அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஏவு

உலக அரங்கில்

கணை ஒவ்வொன்றும் 2000 கிலோ மீற்றர் தூரம் வெடிகுண்டுகளை ஏற்றிச் சென்று தாக்கும் ஆற்றல் உள்ளவை. இந்தச் சுரங்க அறைகளில் இருந்தே ஏவுகணைகள் ஏவப்படும்.

அமெரிக்காவின் உளவு செயற்கைக் கோள் இந்த ஏவுகணைத் தளம் பற்றி தகவல் கொடுத்திருப்பதாகத் தென்கொரியப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது. வடகொரியாவின் இந்த நடவடிக்கை ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் கலக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

# காஸாவிலிருந்து இஸ்ரேலியரை திரும்பப் பெறக்கோரி பெரும் பேரணி

## ஒரு லட்சம் வரையான இஸ்ரேலியர் பங்கேற்றனர்

ஜெருசலேம்,மே17

சர்ச்சைக்குரிய காஸாப் பகுதியிலிருந்து இஸ்ரேலியப் படையினரும் குடியேற்றக்காரர்களும் வெளியேற வேணடும் என்று வலியுறுத்தி சுமார் ஒரு லட்சம் இஸ்ரேலியர்கள் காஸாவில் கூடிப் பேரணி நடத்தியுள்ளனர்.

காஸாவிலிருந்து இஸ்ரேலியரை வாபஸ் பெறும் பிரதமர் ஏரியல் ஷெரோனின் திட்டத்துக்கு ஆதரவானவர்களே இந்தப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தனர்.

ஷெரோனின் சர்ச்சைக்குரிய இந்தத் திட்டத்தினை அவரது சொந்தக் கட்சியான லிக்குட் கட்சியே நிராகரித்து விட்டது. ஆனால், பெரும்பாலான இஸ்ரேலியர்கள் அந்தத் திட்டதிற்கு ஆதரவு தெரிவிக்கின்றனர்.

சமாதானத்தை விரும்பும் கூட்டணியினரும் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியினரும் இணைந்து காஸா திட்டத்திற்கு ஆதரவான இந்தப் பேரணியைப் பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்திருந்தன. கடந்த வாரத்தில் காஸாவில் கொல்லப்பட்ட 13 இஸ்ரேலியப் படையினருக்கு மௌன வணக்கம் செலுத்திய பின்னா பேரணி ஆரம்பித்தது.

பிரதமர் ஷெரோனின் திட்டத்தை நிராகரித்த அவரது லிக்குவிட் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட இங்கு கூடியிருப்போர்களின் எண்ணிக்கை மிகப்பெரியது என்று தொழிற கட்சித் தலைவர் சிமோன் பெரஸ் தெரிவித்தார்.

"நாங்கள் காஸாவிற்கு 'குட்பை' சொல்வோம்" - என்றார் அவர்.

1980இல் இஸ்ரேல் லெபனான் நாட்டை ஆக்கிரமித்ததற்கு எதிராக இடம்பெற்ற பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் பின்னர் இப்போதுதான் இத்தனை பெரிய ஆர்ப்பாட்டம் இடம பெறுகின்றது என்று பேரணி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

பிரதமர் ஷெரோனின் திட்டம் ஹாஸாவிலுள்ள இஸ்ரேலியக் குடியிருப்புகளைதிரும்பப் பெற்றுவிட்டு மேற்குக் கரையில் தான் ஆக்கிரமித்துள்ள பகுதியை தொடர்ந்து தக்க வைத்திருப்பதாகும். இத்திட்டத்தை பலஸ்தீனர்கள் எதிர்க்கிறார்கள். மேற்குக் கரையிலிருந்தும் இஸ்ரேலியர்கள் வெளியேற வேண்டும் என்றும் அவர்கள கேட்கிறார்கள்.

இதேவேளை -

காஸாப் பகுதியில் ராபா அகதி முகாமிலுள்ள வீடுகளை இஸ்ரேலியப் படையினர் தரை மட்டம் ஆக்குவதற்கு அந்த நாட்டு நீதி மன்றம் தற்காலிகமாக விதித்த தடையயை நீக்கியுள்ளது. சனியன்று இந்த தற்காலிக தடையை விதித்த நீதிமன்றம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதனை நீக்கியது.

இதற்குப் பின்னரும் காஸாவிலிருந்து புள்டோஸர்களையும் படையினரையும் வெளியேறுமாறு இஸ்ரேலிய அரசு உத்தரவிடவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ராபா அகதி முகாமில் 200 குடும்பங்கள் வசித்த 88 கட்டடங்களை இஸ்ரேலியப் படையினர் தரை மட்டமாக்கியுள்ளனர் என்று ஐ.நா.உதவி அமைப்புத் தெரிவித்தது. ஆனால், தாங்கள் தீவிரவாதிகளின் வீடுகளை மட்டுமே இடித்தனர் என்று இஸ்ரேலியப் படையினர் கூறுகின்றனர்.


(ஐ)

# டென்மார்க் இளவரசர் இல்லறத்தில் இணைந்தார்

டென்மார்க் பட்டத்து இளவரசர் பொரிக் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மேரி போலாஸ்ட்சன் என்ற பெண்ணை காதலித்து வந்தார். இவர்களது திருமணம் கோபன் ஹேகன் நகரில் கோலாகலமாக நடந்தேறியது. உலகின் பல வேறு நாடுகளில் இருந்தும் அரச குடும்பத்தினர் இதில் கலந்துகொண்டனர்.

ஒரு மாதமாக டென்மார்க் இந்த திருமணத்தையொட்டி விழாக்கோலம் பூண்டிருந்தது. திருமணவிழாவில் 1000இற்கும் மேற்பட்டவர்கள் சாப்பிடும் வகையில் பிரமாண்டமான ராட்சத கேக் ஒன்றும் தயாரிக்கப்பட்டிருந்தது.

# என் மனவானில் சிறகை விரிக்கும் எண்ணப்பறவைகள்...



## மனம் திறந்து சொல்கிறார் முரளிதரன்

சிம்பாப்வேக்கு எதிரான முதலாவது கிரிக்கெட் டெஸ்டில் உலக சாதனை நிகழ்த்தினார் இலங்கை அணியின் முத்தையா முரளிதரன். 'எறிதல்புகார்' இவர் மீது பல முறை எறியப்பட்ட போதும் கலங்காமல் தனது பணியைத் தொடர்ந்து சாதித்து வருகிறார். வோல்ஷின் 519 டெஸ்ட் விக்கெட் சாதனையை முறியடித்ததன் மூலம சர்வதேச கிரிக்கெட் அரங்கில் தலை நிமிர்ந்து நிற்கும் இவரிடம் ஒரு விசேஷ பேட்டி.

★ வோல்ஷின் சாதனையை முறியடித்தது பற்றி.....?

வோல்ஷின் சாதனையை முறியடித்ததில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த அரிய சாதனையை எனது பெற்றோருக்கு சமர்ப்பிக்கிறேன். கிரிக்கெட்டில் நான் வளர்ச்சிப்பாதையில் சென்றபோதும், பிரச்சினைகளை சந்தித்த போதும் எனக்கு ஆறுதலாக இருந்தவர்கள் அவர்கள் தான். மேலும் பொருளாதார ரீதியாகவும் எனக்குப் பெருத்த உதவியாக இருந்த அவர்களே இந்தச் சாதனைக்குச் சொந்தக்காரர்கள்.

★ இந்தச் சாதனை, மேலும் பல சாதனைகளை நீங்கள் நிகழ்த்த வாய்ப்பாக அமையுமா?

நிச்சயமாக. எனக்கும், அணிக்கும (இலங்கை) இது மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. ஆஸ்திரேலியா, இந்தியா போன்ற நாடுகளோடு ஒப்பிடும்போது இலங்கை மிகச் சிறிய நாடு. இதுபோன்ற சாதனைகள் வளர்ந்துவரும் இளம்வீரர்களை சாதிக்கத் தூண்டும். அவர்கள் என்னையோ அல்லது சிறந்த வீரர்களையோ முன்னுதாரணமாகக் கொண்டு தங்கள் அணியை வளர்க்க பெரிதும துணையாக இருப்பார்கள்.

★ சிம்பாப்வே வீர் என்கலா தந்த 'ஹச்சை' ஜெயவர்த்தனே பிடிக்க அந்த உலக சாதனை ஏற்பட்ட வினாடிகளை கூறுங்களேன்?

இந்தச் சாதனைக்காகத்தானே இத்தனை நாள்கள் காத்திருந்தேன். சாதனை நிகழ்த்திய அந்த வினாடிகள் மறக்கமுடியாதவை. இரண்டாவது இன்னிங்சில் பந்துவீச வரும்போது எனக்கு நானே 'ரிலாக்சாகப் பந்து வீசு' எனக் கூறிக்கொண்டிருந்தேன். நான் வீசும் ஏதாவது ஒரு பந்து இந்த சாதனையை தரப்போகிறது என்று எண்ணி சரியான அளவில் பந்தை வீசிக் கொண்டே இருந்தேன். எனது சக வீரர்களும் என்னை உற்சாகப்படுத்திக் கொண்டே இருந்தனர். நீண்ட நேர காத்திருப்புக்கு பிறகு எட்டாவது ஓவரில தான் அது கிடைத்தது.

★ வேகப்பந்து வீச்சாளர்கள் விக்கெட்டுக்களாக வீழ்த்திக்கொண்டிருந்த ஹராரே டெஸ்டில் சாதனைக்கு நீங்கள் போராட வேண்டியிருந்ததா?

520 விக்கெட்டுகளை வீழ்த்தவேண்டும் என்ற சாதனை அவ்வளவு எளிதாக கிடைத்துவிடவில்லை. ஹராரே டெஸ்டில் விக்கெட்டுகள் வீழ்ந்த வேகத்தைப் பார்த்தபோது நான் அடுத்த டெஸ்டில்தான் சாதனை நிகழ்த்துவேன் என்று எண்ணினேன். வாஸ் - சொய்சா இருவரும் சிறப்பாக பந்துவீசிக்கொண்டிருந்தனர். அப்போது வாஸ், கப்டன் அத்தப்பத்துவிடம் சென்று முரளிதரனை பந்துவீசச் செய்யுங்கள் எனது ஓவரை நிறுத்திக் கொள்கிறேன் என்றார் அத்தப்பத்து. உடனே என்னை பந்து வீசப் பணித்தார். இதற்குக் கிடைத்ததே என்கலாவின் விக்கெட். வாஸ் விட்டுத்தராமல் பந்து வீசியிருந்தால் அவருக்கு அதிகமான விக்கெட்டுகள் வீழ்ந்திருக்கும். இந்தப் பெருந்தன்மைக்காக வாஸையும் அத்தப்பத்துவையும் எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம்.

★ இந்தச் சாதனையைத் தவிர்த்து உங்களுக்கு மகிழ்ச்சியைத் தந்த விஷயம்?

எங்கள் அணி உலகக் கோப்பையை வென்றதுதான். இந்தச் சாதனை கூட நாளடைவில் மறந்து போகலாம் உலகக் கோப்பையை வெல்வது என்பது மிகப்பெரிய விஷயம்.

★ உங்கள் கிரிக்கெட் வாழ்க்கையில் மறக்கமுடியாத நபர்?

அர்ஜுன ரணதுங்க. அவரோடு இணைந்து விளையாடிய 8 ஆண்டு[illegible] அற்புதமானவை[illegible] என்னை நன்கு[illegible] அறிந்தவர். எனது[illegible] கிரிக்கெட் வாழ்க்[illegible] கையில் மிகச்[illegible] சிறந்த வழிகாட்டி[illegible] அவர்தான். இரண்[illegible] முறை எனது பந்து[illegible] வீச்சுப் பற்றி சர்ச்சை[illegible] எழுந்தபோதுகூட தனது துன்பமாக அதை எண்ணி வருந்தியவர். அதை எதிர்த்துக் குரல கொடுத்தவர்.

எனது வளர்ச்சியில் பலர் அக்கறை கொண்ட போதிலும், என் இதய சிமமாசனத்தில் ராஜாவாக அமர்ந்திருப்பவர் ரணதுங்க மட்டுமே.

★ ரணதுங்க நீங்கலாக வேறு யாரேனும்?

இருக்கிறார்கள் தற்போதைய அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள், இலங்கை கிரிக்கெட் சபையைச் சேர்ந்த முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், எனது முதல் கப்டன் அரவிந்த டி சில்வா, ஜெயசூர்ய, திலகரத்ன, அததப்பத்து இப்படி கூறிக்கொண்டே போகலாம்.

★ பயிற்சியாளர்கள் உங்கள் சாதனைக்கு எந்த அளவில் உதவினார்கள்

அவர்கள் இல்லாமல் நான்வளர முடியுமா? டேவ் வாட்மோர் இதில் முதலிடம் வகிக்கிறார். இவரோடு புரூஸ யார்ட்லி, திலீப் மெண்டிஸ், ராய்டஸ் மற்றும் எனது பள்ளிப் பருவ பயிற்சியாளர் சுனில் பெர்ணான்டோ. இவர்களோடு உடல் ரீதியாக என்னை பராமரித்துவரும் அலெக்ஸ் கோன்டோரி, டேவிட் யங், டேரில் பாஸ்டர்.

★ யாருக்கு பந்து வீசும் போது எச்சரிக்[illegible]ன் வீசுவீர்கள்?

எனது [illegible] லீஷை ஆன்டி பிளவர், ஸ்டீபன் [illegible] இருவருமே நன்கு சமாளித்து [illegible]வார்கள். ஆனால், அடித்து ஆடக்கூடிய ஒரே வீரர் பிரயன லாரா மட்டுமே. சச்சினுக்கு பந்துவீசுவதும் எனக்கு மிகவும் பிடிக்கும். இவர் ஒரு மிகச் சிறந்த வீரர்.

நன்றி: தினமலர்

# நகரின் கரையோரக் குடியிருப்புகளில் வீதி, வடிகால் வசதிகள் சீரற்றுள்ளன

குடாநாட்டின் மூத்த புவியியற்றுறைப் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை வரையும் தொடர் கட்டுரையின் மூன்றாவது பகுதி இது. (இதன் இரண்டாம் பகுதி கடந்த 14.05.2004 அன்று வெளியாகி இருந்தது)

யாழ். நகரின் நீண்ட கரையோரப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் சமூக, பொருளாதார நிலைமைகளை ஆய்வு செய்கிறார் கட்டுரையாளர்.



3

### வசந்தபுரம் (மேற்கு)

1995இற்கு முன் இக்குடியிருப்பு மிகவும் பின்தங்கிய நிலையில் உருவாகியது. 1995 இடப்பெயர்வுடன் யாவும் அழிந்தநிலையில் விளங்கியது. இங்கு குடியிருந்தோரில் பெரும்பான்மையானோர் வன்னிக்கு இடம்பெயர்ந்தனர். 2002இல் A-9 பாதை திறப்பின் பின்னரே அவர்கள் இங்கு வந்து சிறுகுடிசைகளை அமைத்து மீளக்குடியேறினர். இன்னும கிணறுகளோ, மலசலகூட வசதிகளோ இல்லை. சுற்றுச் சூழல் மாசடைந்துள்ளது. இங்குள்ளவர்கள் நாள்க்கூலி வேலை செய்யும் நலிந்த பிரிவினராவர். 2003இல் இந்துகலாசார அமைச்சின் நிதியுதவியுடன் கட்டப்பட்ட 25 வீடுகளில் மக்கள் குடியிருக்கின்றனர். வீடுகள் பல பூரணமாகாத நிலையில் காணப்படுகின்றன. இவ் வீடுகளுக்கு அண்மையில் உள்ள வெற்றுக் காணிகளைத் தம் ஆட்சிக்கு உட்படுத்தும் நோக்கில் பலர் சிறுகுடிகளை அமைத்து வருகின்றனர்.

### பொம்மைவெளி

முஸ்லிம் மக்களின் வீட்டுப் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு 1970களில் உருவாக்கப்பட்ட வீடமைப்புத்திட்டம் இதுவாகும். இங்கு 75 வீடுகள் அமைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பல வீடுகள் தனியாரால் கட்டப்பட்டன. 1991 இடப்பெயர்வுக்குப் பின்னர் இது மக்கள் அற்ற பிரதேசமாகியது. வீடுகள் அழிந்து பற்றைக்காடுகளாகின. சமூக செயற்பாடுகள் எதுவும் இல்லை. இங்கு மீளக்குடியேறவரும் மக்கள் தங்கி நின்று செல்லும் இடைத்தங்கல் நிலையமாக சில வீடுகள் UNHCR உதவியுடன் திருத்தப்பட்டு மாற்றப்பட்டுள்ளன. இக்குடியிருப்பு தனது பழைய நிலையை அடைய சில காலம் பிடிக்கும்.

### முஸ்லிம் குடியிருப்புப் பகுதி

இதற்குள் பழைய, புதிய முஸ்லிம் குடியிருப்புப் பகுதிகள் அடங்கும் 1981 குடிசார் கணிப்பின்படி இப்பகுதியில் 8 ஆயிரம் மக்கள் வாழ்ந்துள்ளனர். 1991ஆம் ஆண்டு முஸ்லிம் இடப்பெயர்வுக்குப் பின்னர் இங்கு உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள குடியேறினர். யுத்தத் தாக்கத்தாலும், அகதிகள் குடியேற்றத்தாலும் இப்பகுதி பொலிவிழந்து பாதிப்புக்கு உள்ளாகியது. மேலும், திருடர்கள் கைவரிசையில் குறிப்பாக கட்டடங்களின் கதவு, யன்னல்கள் கழற்றப்பட்டுள்ளதால் வீடுகள் பெரும் சேதத்திற்கு உட்பட்டுள்ளன. இப்பகுதி முழுவதும் இன்று பெரும் இடிபாடுகள் கொண்ட பகுதியாகக் காட்சி தருகின்றது. மிகப் பெரிய மீள்குடியேற்ற புனருத்தாரண நடவடிக்கை மூலமே இப்பகுதிக்கு உயிர்கொடுக்கலாம்.

### சூரியவெளி

இக்குடியிருப்பு 1970களில் அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டமாகும். இத்திட்டத்தில் நாவாந்துறைப் பழைய கிராமத்திலிருந்த மக்களே கூடுதலாக இங்கு குடியேறினர். இக்குடி

பேராசிரியர்
**பொ.பாலசுந்தரம்பிள்ளை**

யேற்றம் 1995இல் மக்கள் இடப்பெயா வுடன் அழிவுக்குட்படலாயிற்று. வன்னிக்கு இடம்பெயர்ந்த மக்கள் 2002 ஆம் ஆண்டு வரை மீளத் திரும்பாது இருந்ததும் முன்பிருந்த சில குடும்பங்கள் மீளக்குடியமர இராணுவம் அனுமதிக்காததும் இப்பகுதியில் அழிவை மேலும் மோசமாக்கியது. 2002இல் A-9 பாதை திறப்புடன் இங்கு மீள்குடியேற்றம் இடம்பெறலாயிற்று. 'நிகொட' உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வீடுகளைத் திருத்தும் பணியை மேற்கொண்டுவருகிறது. மீள்குடியேற்ற நடவடிக்கை மூலம் குறிப்பிடத்தக்க முனனேற்றம் காணப்பட்ட போதும் வடிகால, பாதை, அடிப்படை வசதிகள் என்பன முன்னேற்றம் காணாது உளளன.

### நாவாந்துறை

இக்குடியிருப்புப் பகுதி பழைய குடியிருப்புகளையும் புதிய குடியிருப்புகளையும் கொண்டுள்ளது. பழைய குடியிருப்புப் பகுதி தேவாலயத்தைச் சூழஉள்ள பகுதியாகும். புதிய குடியிருப்புப் பகுதி கரையோரப் பிரதான வீதிக்கும் கடற்கரைக்கும் இடையில் உள்ள பகுதியாகும். விளையாட்டுத் திடலுக்கு இருமருங்கிலும் காணப்படும் குடியிருப்புகளும், நாவாந்துறை இறங்குதுறையிலிருந்து கண்ணாப்பிட்டி வரை கடற்கரை ஓரமாக அமைந்துள்ள குடியிருப்புகளும் நாவாந்துறை சந்தைக்கு வடக்கேயுள்ள குடியிருப்புகளும் புதிய பகுதிக்குள் அடங்கும். பழைய குடியிருப்பு குடியடர்த்தி கொண்டதாகவும் அடிப்படை வசதிகள் கொண்டதாகவும் காணப்படுகின்றது. ஆனால், குடிதண்ணீர் மாநகர சபை விநியோகம் மூலமே பெறப்படுகின்றது. மக்கள் பிரதான வீதிக்குச் சென்றே பெறவேண்டும். புதிய குடியிருப்புப் பகுதியில் விளையாட்டுத் திடலுக்கு இருமருங்கிலும் உள்ள பகுதிகள் ஒப்பீட்டளவில் வசதிகள் கொண்டதாகக் காணப்படுகின்றன. நாவாந்துறைக் கரையோர மக்கள் தொடராகவுள்ள 26 குடில்கள் எதுவித வசதிகளும் அற்றுக் காணப்படுகின்றன. இவற்றின் மேற்கு எல்லை கடலாகவும், இராணுவ வேலியாகவும் இருப்பதால் இங்குள்ள மக்கள் கடலுக்கும் போகமுடியாதுள்ளது. காற்றுடன் கூடிய மழைகாலங்களில் கடல்நீர் மட்டம் உயர்ந்து நீர் வீடுகள் வரை செல்வதுண்டு. கிணறு, மலசல கூடங்கள் அமைப்பதற்கு ஏற்ற இடவசதியோ பௌதிக சூழலோ இங்கில்லை. சுற்றுச் சூழல் மக்கள் சுகாதாரத்திற்குக் கேடாக உள்ளது. போதிய இடவசதி இன்மையாலும் கடற்கரையோரத்தை அண்டி இருப்பதாலும் இக்குடியி

## யாழ். நகர கரையோரப் பகுதி ஆய்வு

ருப்பை மேம்படுத்துவது கடினமாக உள்ளது.

### கண்ணாபுரம்

1980களில் அன்றைய நாடாளு மன்றப் பிரதிநிதி யோகேஸ்வரன் அவர்களால் உருவாக்கப்பட்ட வீடமைப்புத் திட்டமாகும். இத்திட்டத்தில் 75 வீடுகள் அமைக்கப்பட்டன. இங்கு வாழ்பவர்கள் குறைந்த வருமானம் பெறும் நகரத் தொழிலாளர்களாக உள்ளனர். இக்குடியிருப்பு திட்டமிட்டு அமைக்கப்பட்டதால் வீதிகள் அகலமானதாகவும் வலைப்பின்னல் உடையதாகவும் பொதுக் கிணறு, நீர்த்தாங்கி, மின்சார வசதிகளைக் கொண்டதாகவும் விளங்குகின்றது. எனினும், வீதிகள் தார் இடப்படாமால் குண்டும்குழியுமாகக் காணப்படுகின்றன.

வடிகால்கள் சீரற்று உள்ளன. மாநகரசபை குடிதண்ணீர் விநியோகம செய்கிறது. வீடமைப்புத் திட்டத்தில் வீடு பெற்றோர் சிலர் பின் தமது வீடுகளைப் பிறருக்கு விற்றதால், வீடுகளைப்பெறாது காத்திருப்போர் இதுபற்றி மனத்தாக்கல் கொண்டுள்ளனர்.

### கண்ணாபுட்டி

கண்ணாபுரத்திற்கும் கடற்கரைக்கும் இடைப்பட்ட பகுதியே கண்ணாபுட்டிக் குடியிருப்பாகும். இங்கு 15 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தற்காலிகக் குடிசைகளில் வாழ்கின்றனர். இங்கு ஒரு பொதுக்கிணறு உண்டு. குடிதண்ணீர் வசதியோ அடிப்படை வசதியோ இல்லை. கொட்டடி நமசிவாயம் பாடசாலைக்கே மாணவர்கள் செல்கிறார்கள்.

### கொட்டடி

இது நகரப் பகுதிக்குள் அமைந்த பழைய குடியிபலாகும். வர்த்தகர்கள், அரச ஊழியர்களைக் கொண்ட பிரிவும் தொழிலாளர்களைக் கொண்ட பிரிவும் என இங்கு வாழும் மக்களை நோக்கலாம். குறித்த முதற் பிரிவினா வாழும் இருப்பிடங்கள் விசாலமானதாகவும் பெரிய வளவுகளைக் கொண்டதாகவும் உள்ளன. வீடுகள் பல யுத்தத்தால் பாதிப்புற்றுள்ளன. இன்று இந்த வீடுகளில் இடம்பெயர்ந்தவர்களும் வளவுகளில் குத்தகைக்குக குடியிருப்பவர்களும் காணப்படுகின்றனர். இங்கு அடிப்படை வசதிகள் ஒப்பீட்டளவில் சிறப்பாக உள்ளன. மாநகர சபையின் குடிதண்ணீர் விநியோகம் கிடைப்பதுடன் சில வீடுகளுக்கு மாநகரசபையின் குடிதண்ணீர்க் குழாய் இணைப்பும் உள்ளன. இக்குடியிருப்பு யாழ்ப்பாண நகரின் மையப் பகுதிக்கு மிக அண்மையில் இருப்பதால் நகர வர்த்தக செயற்பாட்டு விரிவாக்கத்திற்கு உட்படக்கூடிய நிலை காணப்படுகிறது. இங்கு ஒழுங்கான புனர் வாழ்வு, புனருத்தாரணப் பணிகள் மேற்கொள்ளுமிடத்து இக்குடியிருப்பை மீண்டும் நடுத்தர வகுப்பினரின் தெரிவுக்கு உட்படுத்தலாம்.

### சோலைபுரம்

கடந்த 2,3 தசாப்தங்களாக வளர்ச்சிபெற்று வந்துள்ளது. இது அமைந்துள்ள பிரதேசம் முன்னர் தென்னந்தோட்டங்களாகவும் கடற்கரைத் தாழ்பிரதேசமாகவும் விளங்கியது. வீடமைப்புத் திட்டங்கள் மூலமும் சில குடியேற்றம் மூலமும் இப்பகுதி குடியடர்த்தி மிக்கதாக மாறியது. குடிதண்ணீர் இன்மை, ஒழுங்கான வடிகால் அமைப்பு இன்மை, மாநகர சபைக்கழிவுகள் கொட்டப்படுவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்சினை போன்றன இங்குள்ள முக்கிய பிரச்சினைகளாகும். இங்கு வாழும் மக்களும் நலிந்த பிரிவினராவர். பிள்ளைகள் கொட்டடி நமசிவாயத்தில் கல்வி கற்கின்றனர்.

### முத்தமிழ்க் குடியிருப்பு

இக்குடியிருப்பு அமைந்துள்ள பகுதி மாநகரசபைக் கழிவுகள் கொட்டப்பட்டு பின் உயர்த்தப்பட்ட இடத்தில் அமைந்துள்ளது. 1991 கோட்டை யுத்தத்தாலும் 1995 இடப்பெயர்வாலும் பெரிதும் பாதிக்கப்பட்டு மக்கள் இன்றும் மீளக்குடியேறாத பகுதியாக விளங்குகிறது. இங்கு ஒரு சிறு இராணுவ முகாம் ஒன்று உள்ளது. இங்கு வாழ்ந்த குடும்பங்கள் கொட்டடி பழைய மீன் சந்தைக்கு அருகில் தற்காலிகமாக குடியமர்த்தப்பட்டுள்ளனர். முத்தமிழ் குடியிருப்பின் ஒரு பகுதியான முத்தமிழ் வீதிக் குடியிருப்புகள் யுத்தத்தால் பெரும் அழிவுக்குட்பட்டு அண்மையில் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் சிறுவீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன. எனினும், வீடுகள் நெருக்கமாகவும் காணிகள் எல்லை வரையறுக்கப்படாமலும் தனி மறைவு இல்லாமலும் தரை சதுப்புத் தன்மை கொண்டதாகவும் காணப்படுகின்றன. வில்லூன்றிச் சுடலையை அண்டிய குடியிருப்புகள் முன்னேற்றம் காணாது மிகப் பின்தங்கிய நிலையில் உள்ளன.

### மீனாட்சிபுரம்

இது பண்ணைக் கடற்கரையை அண்மித்த பிரதான கழிவுநீர் வாய்க்காலுக்கு மேற்காக அமைந்துள்ளது. கோட்டை யுத்தத்தால் முற்றாக அழிவுற்று அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மீள் குடியேற்றம் ஏற்பட்டபோதும் இக்குடியிருப்பு தனது பழைய நிலையை இன்றும் அடையவில்லை. தாவரச் செய்கை அற்றும் அடிப்படை வசதிகள் இன்றியும் சமூக, சமுதாய செயற்பாடுகள் சீர்குலைந்தும் உள்ளன.

(வளரும்)

---

# கிளிநொச்சியில் பொது வைத்தியசாலை நிறுவ நிதி இருந்தும் கட்டட ஒப்பந்தகாரர்கள் இல்லை!

கிளிநொச்சி,மே17

கிளிநொச்சியில் பொது வைத்தியசாலை ஒன்றை அமைப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், கட்டடப்பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தகாரர்கள் எவரும் முன்வரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், இந்த வைத்தியசாலையின் ஆரம்ப கட்டுமானப்பணிகள் கூட இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையினால் முற்றாகச் சேதமடைந்தது. அது தற்போது தற்காலிக கட்டடங்களிலேயே இயங்கிவருகிறது.

இதனால், கிளிநொச்சியில் புதிதாக வைத்தியசாலை ஒன்று அமைக்கப்படவேண்டியதன் அவசியம் பல் வேறு மட்டங்களிலும் வலியுறுத்தப் பட்டது.

இதன் விளைவாக கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கென மூன்றுமாடிக் கட்டடம் ஒன்றையும் இரண்டுமாடிக் கட்டடம் ஒன்றையும் நிர்மாணிக்கவென ஆசிய அபிவிருத்தி வங்கி 600 மில்லியன் ரூபாவை வழங்கியிருந்தது. கடந்த வருடம் இவ்வைத்தியசாலைக் கட்டடத்துக்கான அடிக்கல் ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியால் நடப் பட்டது. ஆனால், கடந்த ஒரு வரு டத்துக்கு மேலாக -மூன்று தடவைகள் -இவ்வைத்தியசாலைக் கட்டட ஒப்பந்தத்துக்கான கேள்வி அறிவித்தல்கள் பத்திரிகைகள மூலம் வெளிபபடுத்தப்பட்டிருந்தன. எனினும், இக் கட்டடப் பணிகளை முன்னெடுப்பதற்கு கட்டட ஒப்பந்தகாரர்கள் எவரும் இதுவரை விண்ணப்பிக்கவில்லை என்றும், இதனால் நிதி இருந்தும் கட்டடங்களைக் கட்டி வைத்தியசாலையை சிறப்பாக இயங்கவைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் - கவலை தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதேவேளை-

கிளிநொச்சியில் தற்போது இயங்கிவரும் வைத்தியசாலையில் ஜப்பானிய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் சில புதிய கட்டடங்கள் அண்மையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சுமார் 70 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இக் கட்டடத் தொகுதிகளில் வைத்திய விடுதிகள், பெண் நோயாளர்கள் பொது விடுதி, குழந்தை மருத்துவ விடுதி, பிரசவ விடுதி ஆகியன அடங்குகின்றன.

இப்புதிய கட்டடத் தொகுதியை இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி கடந்த 12 ஆம திகதி திறந்துவைத்தார்.

(ஐ-4)

# மகப்பேற்று நிலையம், ஆயுர்வேத ஆஸ்பத்திரியை கொழும்புத்துறை கிழக்கில் இயக்கக் கோரிக்கை

கொழும்புத்துறை,மே17

கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் முன்னர் இயங்கிவந்த யாழ். மாநகரசபை மகப்பேற்று நிலையத்தையும், இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலையையும் மீளவும் அப்பகுதிகளில் ஆரம்பிக்க ஏற்பாடு செய்து தருமாறு யாழ். மாநகரசபை ஆணையாளரிடம் கொழும்புத்துறை கிழக்கு சனசமூக நிலையத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் சனசமூக நிலையங்களின் நிர்வாகத்தினருக்கும் ஆணையாளருக்கும் இடையில் இடம் பெற்ற சந்திப்பில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக இப்பகுதியில் மகப்பேற்று நிலையம் இயங்கிவந்தது. அத்துடன், சனசமூக நிலையக் கட்டடத்தில் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலையும் நடத்தப்பட்டு வந்தது.

1995ஆம் ஆண்டு யுத்தத்தை அடுத்து இக்கட்டடங்கள் சேதமடைந்தன. இதனால், இந்த நிலையங்கள் இயங்கமுடியாது போய்விட்டன.

தற்போது இப்பகுதியில் மக்கள் மீளவும் குடியமர்ந்துள்ளனர். எனவே, மக்களின் வசதி கருதி இவற்றை மீளவும் இயக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையங்களுக்கான கட்டடத்தை அமைக்க காணி வசதிகளை செய்து தர ஆயத்தமாக உளளோம். அதற்கான அமைப்பு ஏற்பாடுகளை செய்து தாருங்கள் என ஆணையாளரிடம் கோரியுள்ளதாக சனசமூக நிலைய தலைவர் எஸ்.நடராசா தெரிவித்தார். தற்போது கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் தனியார் வீடொன்றில் இந்த மகப்பேற்று நிலையம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-30)

### கடத்தப்படவிருந்த மாணிக்கக்கற்கள் கண்டுபிடிப்பு

கொழும்பு,மே17

சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குக் கடத்தப்படவிருந்த மாணிக்கக் கற்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்டுள்ளன.

சுமார் ஆயிரத்து 200இற்கும் அதிகமான மாணிக்கக் கற்களை விமான நிலைய சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர். ஆரம்பக்கட்ட விசாரணைகளின் பின்னர் அரசுரிமையாக்கப்பட்டுள்ளன.

இவை பை ஒன்றில் வெளிநாடு ஒன்றிற்கு எடுத்துச்செல்லப்படவிருந்த சந்தர்ப்பத்திலேயே கைப்பற்றப்பட்டன என்று உதவி சுங்க அத்தியட்சகர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

(ஐ-6)

### மணல் அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிப்பு

வடமராட்சி கிழக்கிலுள்ள குடத்தனை, மணல்காடு ஆகிய இடங்களிலிருந்து மணல்பெற அனுமதிப்பத்திரம் பெற்றோர் அதனை புதுப்பித்துக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுப்பித்த அனுமதிப்பத்திரங்களுக்கே இன்று முதல் மணல் விநியோகிக்கப்படும் என இதற்குப் பொறுபபாக உள்ள வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வுப் புனரமைப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

தும்பளையில் இயங்கிவரும் வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் அலுவலகத்தின் உபபணிமனையில் பெறப்பட்ட மணல் அனுமதிப்பத்திரங்கள் அங்கேயே புதுப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

உதயன்

## ஆசிரிய பற்றாக்குறை: அரசு நீக்குமா?

வடக்கு - கிழக்கில் ஆசிரிய பற்றாக்குறை மிக மோசமாக நிலவுவது குறித்து மீண்டும் ஒரு தடவை சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது.

2,700 ஆரம்ப ஆசிரியர்கள், 1,700 ஆங்கில ஆசிரியர்கள் ஏனைய பாடங்களுக்கு 1,600 ஆசிரியர்கள் என பற்றாக்குறை மிக மோசமாக இருக்கின்றது.

ஆசிரிய பற்றாக்குறைப் பிரச்சினையைத் தீர்க்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண கல்வி நிர்வாகத்திடமிருந்தும் புத்திஜீவிகள், கல்விமான்கள், கல்வித்துறை நிர்வாகிகள் போன்றோரிடமிருந்தும் அரசுக்கு விடுக்கப்படும் கோரிக்கைகள் 'செவிடன் காதில் ஊதிய சங்காகவே' இருந்து வருகின்றன என்றும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இத்துறையில் அரசுத் தரப்பு தொடர்ந்து காட்டிவரும் புறக்கணிப்புப் போக்கு - மாற்றாந்தாய் மனப்பான்மை - அசமந்தம் - வடக்கு - கிழக்கைத் தாயகமாகக் கொண்ட தமிழர்களுக்கென்று இப்பிரதேசத்தில் ஆட்சி அதிகாரத்துடன் கூடிய ஒரு நிர்வாகக் கட்டமைப்பு வந்தால் மட்டுமே இப்பிரச்சினைக்குத் தீர்வுகிடைக்க முடியும் என்றதோர் எண்ணப்பாட்டை அம்மக்கள் மத்தியில் உறுதிப்படுத்தி வருகின்றது.

"வடக்கு - கிழக்கில் ஆசிரிய பற்றாக்குறையை நீக்குவதற்கு அதிகாரிகள் மட்டத்திலும் அரசு மட்டத்திலும் தொடர்ந்து தாங்கள் எடுத்துவரும் தீவிர முயற்சிகள் சொற்ப பலனையே தந்துள்ளன" என்று எரிச்சலுடன் சுட்டிக்காட்டுகின்றார் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம்.

"ஆசிரிய பற்றாக்குறையால் வடக்கு - கிழக்கு மாணவர்களின் கல்வி சுமார் ஒரு தசாப்த காலமாக சீரழிந்து போய்க்கிடக்கின்றது. உடனடியாக - அவசர அவசரமாக - ஆகக் குறைந்தது 2,500 ஆசிரியர்களையாவது வடக்கு - கிழக்கிற்கு நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வடக்கு - கிழக்கு மாகாணசபை அரசைக் கோரியுள்ளது. ஆனால், அரசிடமிருந்து எந்தப் பதிலும் வரவேயில்லை." - என்று மாகாணக் கல்வியுடன் தொடர்புடைய மூத்த அதிகாரி ஒருவர் ஆதங்கம் தெரிவித்தார்.

"ஆசிரியர் பணிக்கு ஆட்களைச் சேர்க்கும்போது அரசும அதிகாரிகளும் தென்னிலங்கையில் அதிக கரிசனை காட்டுகின்றார்கள். இதனால், தெற்கில் தேவைக்கு அதிகமான ஆசிரியர்கள் நிரம்பி வழிகின்றார்கள். வடக்கு - கிழக்கில் ஆசிரிய பற்றாக்குறை மோசமாகி அங்கு கல்வி தேய்கின்றது' - பொருமுகிறார் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர்.

ஆசிரிய நியமனங்களில் மட்டுமல்ல -'கல்விச்சேவை நிர்வாகிகள் தெரிவிலும், பதவியுயர்விலும் கூட இதே நிலைமைதான்.

முழு இலங்கையையும் எடுத்துப் பார்த்தால் சேவையில் உளள நிர்வாக அதிகாரிகள் எண்ணிக்கைப்படி ஆளணப் பற்றாக்குறை இல்லை. ஆனால், வடக்கு - கிழக்கிலோ எண்ணிக்கை உரிய ஆளணியில் 40 வீதம் கூட இல்லை.

இந்நிலைமை எப்படி ஏற்பட்டது?

வடக்கு - கிழக்கில் பணியாற்றவேண்டிய - தமிழ் பேசுகின்ற - கல்வி நிர்வாக அதிகாரிகளின் ஆளணி இடங்களைப் பயன்படுத்தி அதிகளவில் சிங்களவர்களுக்கு அப்பதவிகளை வழங்கி அவர்களை தெற்கில் வைத்திருப்பதால் அங்கு கல்வி நிர்வாக அதிகாரிகள் அளவுக்கு அதிகமாக நிரம்பி வழிகிறார்கள். வடக்கு - கிழக்கிலோ அளவிடமுடியாத பாதிப்பு.

நாடு முழுவதிலும் என்று கணக்குப் பார்க்கும்போது தேவையான ஆளணிக்கு மேலதிகமாக கல்வி நிர்வாக அதிகாரிகள் இருப்பதால் இதுவிடயத்தில் வடக்கு - கிழககின் தேவையையோ பற்றாக்குறையையோ நிவர்த்திசெய்ய வழியின்றி கைவிரிக்க முயல்கிறது அரசு.

புதிய அரசு பதவியேற்ற கையோடு, பட்டதாரிகள் - பததாயிரம் பேர், ஜி.சீ.ஈ. உயர்தரம் சித்திபெற்றோர் - பததாயிரம் பேர், ஏனையோர் - பத்தாயிரம் பேர் என முப்பதாயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் அவசர அவசரமாக முன்னெடுக்கப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த நியமனங்களுக்கும், அதன்பின்னர் வரும் வேதனக் கொடுப்பனவுகளுக்கும் உரிய நிதியைப்பெறும் பொருளாதாரவளம் இந்த அரசிடம் உள்ளதா என்ற சந்தேகம் பலதரப்பினருக்கும் உண்டு.

"நாட்டு மக்களுக்கு சந்திரமண்டலத்திலிருந்தாவது அரிசிகொண்டு வந்து தருவோம்" - என்று ஆட்சியைப் பிடிக்க எழுபதுகளில் முழங்கிய கட்சிதான் இன்று ஆட்சி பீடத்தில் உள்ளது. எனவே, புதிதாக - அவசர அவசரமாக - தான் வேலைக்குச் சேர்க்கும் முப்பதாயிரம் பேருக்கும் உரிய வேதனத்தை சந்திரமண்டலத்திலிருந்தாவது கொண்டு வந்து அக்கட்சியும் அதன் அரசும் கொடுக்கும் என நம்புவோமாக!

அப்படி புதிய நியமனங்களை வழங்கும்போது அரசின் பாகுபாட்டுக் கொள்கையால் - ஒதுக்கல் போக்கால் - பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குக் கல்வித்துறையின் பால் சற்று கண்திறந்து பார்த்து, கரிசனை காட்டும்படி அரசை வலியுறுத்திக்கோர விரும்புகிறோம்.

வடக்கு - கிழக்கில் ஆசிரிய நியமனங்களையும், பிற இதுபோன்ற பாதிப்புக்குரிய ஏனைய துறைகளுக்கு உரிய நியமனங்களையும் இந்த முப்பதாயிரம் பேருக்கு வேலை வழங்கும் திட்டத்துக்குள் உள்ளடக்கினால் வடக்கு - கிழக்கு ஆசிரியர் பற்றாக்குறைப் பிரச்சினையும் தீரும். இந்த முப்பதாயிரம் புதுநியமனங்களில் தமிழர்கள் ஒதுக்கப்படவில்லை என்ற நியாயமான நிலைப்பாடும் ஏற்படும். அரசு கவனிக்குமா?

## காலத்தின் பதிவு



கோடை வெயில் தந்த குளிர்மை. (படம்: தீபன்)

# அனைத்துப் பீடங்களின் மாணவரும் கணனி அறிவு பெற விரைவில் வசதி

### விஞ்ஞான பீடாதிபதி குமாரவடிவேல் தகவல்

யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்துப்பீட மாணவர்களும் கணனி அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இன்னும் ஒரு சில மாதங்களில் இதன் பயனை மாணவர்கள் பெற்றுக்கொள்வார்கள்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல்.

நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற விஞ்ஞான வார இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்கலைக்கழகத்தில் கல்வியை மட்டுமே புகட்டுவது என்பது நோக்கமல்ல. மாணவரிடையே புதைந்திருக்கும் ஏனைய புறநிலை நடவடிக்கைகளைக் கண்காணிப்பதும் எமது பணியாகும்.

இதற்காகவே மாணவர்கள் உடற்கல்வி, கலை, கலாசாரம் போன்றவற்றில் ஈடுபடுத்தி அவர்களின் திறமைகளினை வெளிக கொண்டு வருவதற்குரிய செயற்பாடுகளை முன்னெடுக்கிறோம்.

பல்கலைக்கழகத்திலுள்ள அனைத்துப் பீடங்களும் கணனி அறிவைப் பெற்றுக்கொள்ளக் கூடியவகையில் அதற்கான நடவடிக்கைகளினை முன்னெடுத்த வண்ணமே உள்ளோம். இன்னும் சில மாதங்களில் இதனூடாக மாணவர்கள் பயனைப் பெற முடியும்.

1974ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது விஞ்ஞானபீடம் 30 வருடத்தைப் பூர்த்தி செய்து இளமைத் துடிப்புடன் திகழ்ந்து கொண்டிருக்கின்றது.

எமது விஞ்ஞானபீடம் 1984ஆம் ஆண்டுக் கலவரத்தின் போதும் 1995ஆம் ஆண்டு இடம்பெயர்வுகளின் போதும் பல இழப்புக்களைச் சந்தித்தது.

இந்த இழப்பீடுகள் முழுமையாக நிவர்த்தி செய்யப்படவில்லை. அரசியல்துறையினர்கள், ஊடகவியலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் போன்ற அனைவரும் ஒருங்கே பங்களித்தால் எமது பீடத்தை மேலும் உயர்த்தமுடியும். இதற்குப் பின்நிற்போமேயானால் எதிர்கால சந்ததியினருக்குப் பதில் கூறமுடியாது போய்விடும்.

இதற்காக அனைத்துத் தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்று தெரிவித்தார். (ஐ-4-ரி)

# கண்ணிகளுக்கு எதிரான உடன்பாட்டில் ஒப்பமிட அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்

### மனிதநேய அமைப்பு பிரதிநிதிகள் கோரிக்கை

இலங்கை அரசுக்கு உதவி வழங்கும் நாடுகளும் மற்றும் சர்வதேச தொண்டர் அமைப்புகளும் கண்ணிவெடிப் பயன்பாட்டுக்கு எதிரான ஒட்டாவா உடன்படிக்கையில் இலங்கை அரசை கைச்சாத்திட நிர்ப்பந்திக்க வேண்டும் என யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் இணைப்பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் யாழ். நல்லூர் வர்த்தகத் தொழில்மன்ற மண்டபத்தில் இடம்பெற்ற கண்ணிவெடிகள் தொடர்பான செயலமர்வில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது. இலங்கை அரசு கண்ணிவெடிகளைப் பயன்படுத்துவதற்கு எதிரான ஒட்டாவா உடனபடிக்கையில் கைச்சாத்திடுவதற்கு அழுத்தங்கள் கொடுக்கவேண்டும் என்று செயலமர்வில் கருத்துக்கள் பல முன்வைக்கப்பட்டன.

அரசும் - புலிகளும் கண்ணிவெடிகளைப் புதைப்பதில்லை என்ற உடன்பாட்டிற்கு வரவேண்டும் எனவும், போரில் கண்ணிவெடிப் பயன்பாட்டினை முற்றாக இல்லாதொழிக்கவேண்டும் என்ற கருத்தும் முதன்மையாக வைக்கப்பட்டது.

இச்செயலமர்வில் கருத்துத் தெரிவித்த வண. சுஸஜி தேரா போரின் விளைவுகள் மக்களையே கூடுதலாகப் பாதிக்கின்றது. மக்களில் சிறுவர்கள் வெடிபொருள்களினால் உயிராபத்துக்களை மிகப் பெரியளவில் எதிர்கொள்ளகின்றனர் - என்று தெரிவித்தார். (ஐ-12)

## உள்ளூராட்சி மன்ற செலவீனங்கள் பிரதிச் செயலாளரால் நேரடியாக ஆய்வு

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் கடந்த 5 ஆண்டு கால செலவீனங்கள் பரிசீலிக்கப்பட்டிருக்கின்றன.

மாகாண பிரதி செயலாளர் (கணக்காய்வு) கலாநிதி கே.தியாகராஜா கடந்த வாரம் இங்கு வருகை தந்து இந்தப் பரிசீலனைகளை மேற்கொண்டார்.

யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா தலைமையில் இந்தப் பணி இடம்பெற்றது.

மாவட்ட மட்டத்தில் உள்ள சகல பிரதேச சபை, நகரசபைகளின செயலாளர்கள் அழைக்கப்பட்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகததில் வைத்து செலவீன விவரங்கள் பரிசீலிக்கப்பட்டன. பிரதேச சபை, நகரசபை சட்ட விதிகளுக்கு முரணாகச் செய்யப்பட்ட கணக்குகள் தொடர்பாக விளக்கமும் கோரப்பட்டது. அத்துடன் எழுதுநர் தரத்தில் உள்ள செயலாளர்கள் பெறும் 'மேலதிக கடமையை கவனித்தல்' என்னும் வேதனம் சட்ட விதிகளுக்கு முரணான பெறுவனவு என்று சுட்டிக காட்டப்பட்டது. இதனைச் சம்பந்தப்பட்டோர் மீளச் செலுத்த வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை உள்ளூராட்சி சட்ட விதிமுறைகளை மீறிய செலவு விவரம் தொடர்பான கணக்குகள மீளப் பரிசீலனை செய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-185)

### நாளை

வைகாசி 05
செவ்வாய்க்கிழமை
(18.05.2004)
திதி : சதுர்த்தசி
பகல் 8.58 வரை.
அமாவாசை விரதம்
நட்சத்திரம் : பரணி
மாலை 6.51 வரை
சுபநேரம்: 10.22 - 11.52
ராகுகாலம்: 02.52 - 4.22
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

வறுமையே பாவங்கள் எல்லாவற்றிலும் பொல்லாதது.

## உடல்நலத்துக்கு கேடாகக்கூடிய 'ஜூஸ்' வகைகள் விற்பனை

**பொதுமக்களுக்கு சுகாதாரப் பகுதி எச்சரிக்கை**

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் ஜூஸ் பைககற்றுகளை பாவனைக்குட்படுத்த வேண்டாமென மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் யாழ். மாநகரச்பை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாஸ்.

இதுதொடர்பாக அவர்மேலும் தெரிவிததாவது:-அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள அதிகூடிய வெப்பநிலையினை அடுத்து பலரும் குளிர்பானங்களையும் ஜூஸ் வகைகளையும் எவ்வித அனுமதியும்பெறாமலே வீடுகளில் தயாரித்து விற்பனைசெய்கின்றனர். இதுதொடர்பாக எமக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதனால், பலவிதமான நோய்கள்பரவும் ஆபத்தான நிலை உள்ளது. ஆகையால் ஜூஸ் பைக்கற்றுகளைப் பாவனைக்குட்படுத்தும் மக்கள் அவற்றில் தயாரிப்புத்திகதி, முடிவு திகதி இடப்பட்ட சுட்டுத்துண்டுகள் உள்ளதா என்று பார்வையிட்டு அதனைப் பாவனைக்குட்படுத்தவும் - என்று அவர் தெரிவித்தார். (ஐ-ரி)

## பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு

# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சின் நிதிமூலம் மேற்கொள்ளப்படவிருக்கும் கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்குத் தகுதியான பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரரிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் முல்லைத்தீவுப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 25.05.2004.
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 09.06.2004 மதியம் 12.00 மணி.
3. கேள்வி திறக்கப்படும் திகதி : 09.06.2004 பி.ப.3.00 மணி.
   (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
5. கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு தனித்தனி உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது தலைமைக்காரியாலயத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கு அமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல்வேண்டும்.
6. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் முல்லைத்தீவுப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | வற்வரி 15% |
|---|---|---|---|
| 1. முல்லைத்தீவு விளையாட்டு மைதானம் அபிவிருத்தி வேலை | 37500.00 | 800.00 | 120.00 |
| 2. அளம்பில் அன்னைவேளாங்கண்ணி கடற்கரை வீதி புனரமைத்தல் | 7500.00 | 500.00 | 75.00 |
| 3. சிலாவத்தை கடற்கரை வீதி புனரமைத்தல் | 7500.00 | 500.00 | 75.00 |
| 4. முள்ளிவாய்க்கால் கடற்கரை வீதி புனரமைத்தல். | 5500.00 | 500.00 | 75.00 |
| 5. மாத்தளன் சென்.அன்ரனி கடற்கரை வீதி புனரமைத்தல். | 4000.00 | 500.00 | 75.00 |
| 6. பொக்கணை கடற்கரை வீதி புனரமைத்தல். | 8000.00 | 500.00 | 75.00 |
| 7. கஸ்ரம் கள்ளப்பாடு கடற்கரை வீதி | 2250.00 | 500.00 | 75.00 |
| 8. குருசடி செம்மலை கடற்கரை வீதி புனரமைத்தல். | 6750.00 | 500.00 | 75.00 |

ரி.வி.கிருஷ்ணசாமி
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
முல்லைத்தீவு.

(சி35023)(37)


## BEAUTY PARK

கேக் ஐசிங்வகை, ஐசிங்பூக்கள், மணப்பெண் அலங்காரங்கள், Facial, கூந்தல் அலங்காரங்கள், முத்து ஆபரண வேலைப்பாடு, பூ அலங்காரம் போன்றவற்றிற்கான பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

குறிப்பு: இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும் ஓடர்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு:

M.JEYA
மாத்தனை கோயிலடி,
சம்பியன் லேன்,
கொக்குவில்.
021 222 5583

M.JEYA
நமிலாஸ் கொமினிக்கேசன்,
நெல்லண்டி,
தும்பளை.
T.P.No.: 021 226 3149

(இரு இடங்களிலும் நடைபெறும்)

(32017)(38-12)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 577 |
| திகதி | 14-05-2004 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு

செல்லுபடியாகும் தொடர் இல.
5657467- 5670191

வெற்றி இலக்கங்கள்
**08 21 22 34**

லக்கினம் மகரம்

ஜக்பொட் பரிசு
ரூபா.16,28,850/-
வெல்லப்படவில்லை.
இந்த செவ்வாய்க்கிழமைக்கான
ஜக்பொட் ரூபா. 22,60,250/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 2,82,781 | 10/- | 28,27,810/- |
| 2.இலக்கங்கள் | 25,935 | 20/- | 5,18,700/- |
| 1.இல + லக்கினம் | 25,657 | 30/- | 7,69,710/- |
| 2.இல + லக்கினம் | 2,384 | 100/- | 2,38,400/- |
| 3.இலக்கங்கள் | 699 | 500/- | 3,49,500/- |
| 3.இல + லக்கினம் | 67 | 5,000/- | 3,35,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 16,28,850/- | - |
| மொத்தம் | 3,37,526 | - | 53,39,120/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 53,39,120

தொடர் இல. 4686026 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2004 மே 18ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி,
கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5669581-7-08
5660973-4-00
5664968-5-94
5662131-3-90
5669368-7-86




அமோக விளைச்சல்
என்றால் இல்லமும்,
உள்ளமும்
பொன்னொளி பெறுகிறது

விளைச்சல்தான் எமது எதிர்பார்ப்பு. அமோக விளைச்சல் என்றால் எல்லோருக்குமே சந்தோஷம். செய்ய நினைத்தவற்றை விட அதிகமாகவே செய்யலாம்.

உங்கள் ஆசை, அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஹேலீஸ் உரம் உங்களுக்கு உறுதுணை புரிகிறது. அது உங்களுக்குப் புதிதான ஒன்றல்ல என்பதோடு, யுகயுகமாக உங்கள் உற்ற நண்பனாக உங்களுடன் கைகோர்த்து நிற்பதுவும் அதுவேயாகும்.

125 வருடகாலமாக நமது நாட்டு விவசாயத்துறை வளர்ச்சியில் அர்ப்பணிப்புச் செயற்பாட்டுடன் ஹேஸ்ப்ரே தெளிகருவி, பாயர் விவசாய இரசாயணம், எக்ரோடெக் ட்ரெக்டர்கள், கிரனோலா விதை உருளைக்கிழங்கு போன்ற கீர்த்திபெற்ற தயாரிப்புகளை உங்களுக்கு வழங்கிய ஹேலீஸ் இன் புதிய படைப்பே ஹேலீஸ் உரம்.

நம்நாட்டு உழவர் பெருமக்களின் எதிர்பார்ப்புகளையும் தாண்டியது எமது அர்ப்பணிப்பு.




HAYLEYS
ஹேலீஸ்
உரம்
புதிய எதிர்பார்ப்பு

# யா/கரணவாய் மகாவித்தியாலயம், கரவெட்டி

## வாழ்த்துகின்றோம்

2003 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (சா/தர) பரீட்சையில் தோற்றி க.பொ.த. (உயர்தரம்) கற்பதற்கு தகுதிபெற்ற எமது பாடசாலை மாணவர்களான-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | த.அபிராமி | 7A | 2B | C | |
| 2. | வே.றமணன் | 5A | 4C | S | |
| 3. | சி.சிவரஞ்சினி | 4A | 2B | 3C | |
| 4. | நா.பிருந்தா | 4A | 2B | C | 3S |
| 5. | பா.துஸ்யந்தினி | 3A | B | 5C | S |
| 6. | இ.சுகிந்திரன் | 2A | B | 3C | 3S |
| 7. | பு.ஜெனிட்டா | A | 2B | C | 4S |
| 8. | செ.அகிலன் | A | B | C | 4S |
| 9. | ம.வாசுதேவன் | A | 7C | 2S | |
| 10. | து.துஸ்ஸயந்தி | A | 4C | 2S | |
| 11. | கு.புவீதா | 3B | C | 4S | |
| 12. | சி.டர்ஸனா | 2B | 3C | 3S | |
| 13. | ச.ஜெயக்குமார் | B | 2C | 5S | |

ஆகியோரையும் இந்த மாணவர்கள் சிறப்படைய ஆக்கமும் ஊக்கமும் அளித்து கல்வியறிவூட்டி நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியப் பெருந்தகைகளையும் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*யா/கரணவாய் ம.வி,*
*கரவெட்டி.* (32007)(42-12-38)

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.

---

# UNIVERSITY OF JAFFNA
## Tender Notice

Sealed Tenders are invited from reputed Suppliers/Contractors for the supply, transport, installation and commissioning of Air Conditioners. Details are as follows.

| Serial No. | Item | No. |
|---|---|---|
| 1. | Window Type Air Conditioner BTU 24000/HR | 11 No. |

Tender documents could be obtained from the Assistant Registrar (Administration) from 18th May 2004 to 24th May 2004 on producing receipt for the payment of Rs.2000/= as non refundable Tender fee in cash at the **shroff Counter, University of Jaffna** or by money order drawn in favour of University of Jaffna payable at the Jaffna Post office.


Tenders in duplicate may be sent by post under registered cover or deposited in the Tender box available at the Registrar's office before 2 p.m. on 1st June 2004. Tenders will be opened immediately after the closing at the **Board Room, University of Jaffna.** Tenderers or their authorised representative could be present at the opening time. The left hand top corner of the envelope should be marked as "Tender for Air Conditioners".

Further information, if needed could be obtained from the Assistant Registrar (Administration)
T.P.No.: 021-222 6517.

**Registrar,**
**University of Jaffna.** (C-34978)(34-12-38)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 01 - 11 - 1929

மறைவு 17 - 04 - 2004

## கையிலாயபிள்ளை நடராசா

*துணையாக நின்று தூயநல் வழிகாட்டி*
*நிறையாத வேளையில் நீங்கள் பிரிந்ததேனோ?*
*அணையாத விளக்காய் அவனியிலே என்றும்*
*அன்புயர்ந்த தெய்வமே! எம் அகங்களில் உறைகிறதே!*

கதிரிப்பாயைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கையிலாயபிள்ளை நடராசா அவர்களின் மரணச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது துயரத்தைப் பகிர்ந்துகொள்ளும் விதத்தில் பத்திரிகையில் அனுதாபச்செய்தி வெளியிட்ட யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (17.05.2004) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

*வைத்தியசாலை வீதி,*
*மட்டுவில் வடக்கு.* (31963)(34-18-38)

- குடும்பத்தினர்.

---

# சமய சந்நிதிகளில்

சுதுமலை அருள்மிகு புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினெட்டுத் தினங்கள் நடைபெறும். அடுத்த மாதம் 2ஆம் திகதி முற்பகல் 10மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 10மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும். (3-139)

★ ★ ★

ஆனைக்கோட்டை அருள்மிகு கரைபிரான் அதிவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெறும். நாளை செவ்வாய்க்கிழமை காலை தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (3-139)

★ ★ ★

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து 10நாள்களாக இடம்பெறவிருக்கின்றன.

எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (3-70)

★ ★ ★

சாவகச்சேரி பெரியமாவடி கந்தசுவாமி தேவஸ்தான மஹோற்சவத்தில் இன்று காலை 9மணிக்கு தேர் உற்சவமும் நாளை காலை 10மணிககு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (3-117)

## ரெலிக்கொம் தென்மராட்சிக்கு விஸ்தரிப்பு

தென்மராட்சி,மே17

சாவகச்சேரிப் பிரதேசத்திற்கு விரைவில் தொலைபேசி இணைப்புகள் கிடைக்கவுள்ளது. யாழ். ரெலிக்கொம் நிறுவனத்தினர் இந்தத் தொலைபேசி இணைப்புகளை வழங்கவுள்ளனர்.

தொலைபேசி இணைப்புக்கு விண்ணப்பித்தவர்களுக்கு ரெலிக்கொம் நிறுவனத்தினர் சம்மதம்கேட்டுக் கடிதம் அனுப்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தொலைபேசி இணைப்புக்கு விண்ணப்பித்தவர்களுக்கு ரெலிக்கொம் நிறுவனத்தினரால் அனுப்பப்பட்ட 75 இற்கு மேற்பட்ட கடிதங்கள் விநியோகிக்க முடியாமல் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில் தேங்கியுள்ளதாக அஞ்சலக வட்டாரங்கள் தெரிவித்தன. (3-117)

## மோசமான நிலையில் கொழும்புத்துறை வீதி

கொழும்புத்துறை,மே17

கொழும்புத்துறை வீதி நீண்டகாலமாகச் செப்பனிடப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

கொழும்புத்துறைப் பகுதிகளுக்குச் செல்லும் பிரதான பாதையான இவ்வீதி சுண்டிக்குழி சந்திக்கு அப்பால மிகவும் மோசமாகச் சேதமடைநதுள்ளது.

மககள் பயணங்களை மேற்கொளவதில் பெரும்சிரமங்களை எதிர்நோக்குவதாக முறையிடுகின்றனர். (3-30)

---

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்




நாயன்மார்கட்டு - தாவடியைச் சேர்ந்த சிவகுமார்-சுதர்சினி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன்

செல்வன்

## நர்த்தனன் (NARTHANAN)

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (17.05.2004) திங்கட்கிழமை தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அக்கா (பைரவி) மற்றும் அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமா, மாமி, மச்சான், மச்சாள்மார்கள், சித்தப்பா, சித்தி, தங்கை அபிநயா, சின்னப்பப்பா, சின்னம்மம் மாமார்கள், சித்தப்பாமார்கள், அத்தைமார்கள், அனைவரும் சகல கலைகளும் கற்று நீடூழி காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். (31989)

தகவல் :-அப்பப்பா, அம்மப்பா (க.சிவராசா) (க.சுந்தரலிங்கம்)

---

# கோண்டாவில் இந்துவின்
## மனமுவந்த வாழ்த்துக்கள்

※ க.பொ.த. (உ.த) வகுப்பு கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு முதல் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் (2003இல்) பல்கலைக்கழகம் புகுந்து சாதனை படைத்தவர்களான,

செல்வி க.ஜெகதீஸ்வரி, செல்வி இ.சங்கீதா

ஆகிய இருவரையும்,

※ 2003 தரம் 5புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களான,

1.செல்வன் வ.தக்சன்
2.செல்வி க.யசோதா
3.செல்வன் சி.கஜீவன்
4.செல்வி சி.துவனீகரா ஆகியோரையும்,

கல்வியிலும், வாழ்விலும் மேலும்மேலும் சிறப்புற இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், அபிவிருத்திச்சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

யா/கோண்டாவில்
இந்து மகாவித்தியாலயம்.

(32002)(12-38)

---

# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
### வருடாந்த ஒன்று கூடலும் பொதுக்கூட்டமும் -2004

தலைவர்: திரு.பொ.சுந்தரலிங்கம (அதிபர்)
இடம்: துரையப்பாப்பிள்ளை மண்டபம்
காலம்: 13.06.2004 ஞாயிறு

காலை 10.00 மணி (ஒன்றுகூடல்)
பி.ப. 01.00 மணி (பொதுக்கூட்டம்)

உறுப்பினர்கள் அனைவரும் நடப்பு ஆண்டுக்கான அங்கத்துவப் பணத்தை 10.06.2004 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன் செலுத்தித் தமது அங்கத்துவத்தைப் புதுப்பித்துக்கொள்ளவும்.

தலைவர்
பொ.சுந்தரலிங்கம். (31975)(38-12)

இணைச்செயலாளர்,
ம.மணிசேகரன்.

---

| 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி | முதலாம் ஆண்டு நினைவஞ்சலி |
|---|---|
|  |  |
| **சந்திரன் சுரேஸ்** | **சந்திரன் சிறிகரன்** |
| தோற்றம் : 15.05.1981 | தோற்றம் : 05.12.1986 |
| மறைவு : 10.07.1999 | மறைவு: 29.05.2003 |

எங்கள் அருமைச் செல்வங்களை
இழந்து ~ நாம் படும் துன்பம்
கொஞ்சம் இல்லை
நாங்கள் உங்கள் விண்ணுலக வாழ்வில்
வந்து சேரும் மட்டும் இத்துன்பத்தில்
இருந்து மீள முடியாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அச்செழு,*
*போயிட்டி.*

(31851)(42-38-18)

தகவல்:
-குடும்பத்தினர்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

தரமான Prima Broiler குஞ்சுகள், Prima பேட்டுக்குஞ்சுகள் 17.05.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முற்கூட்டியே பதிவுசெய்யவும். Suddi Farm வட்டுக்கோட்டை, பருததித்துறை கிளையிலும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம் ( நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முததிரைச் சந்தையடி, நல்லூர்.
(31729)

கறுப்பு, வெள்ளை நிற பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: அசோக்குமார், கிறிஸ்தவ தேவாலயம் முன்பாக, அராலி வடக்கு, அராலி.
(31966)

500 - தொடரிலக்கமுடைய YA-MAHA NEWS MATE YCLS மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.அமலன், 18/2, கோயில் ஒழுங்கை, நாவாந்துறை, யாழ்ப்பாணம். T.P.: 5985, 3688
(32029)

MORIS MINOR CAR 2 SRI xxx BLACK COLOUR TOPPING CONDITION FOR SALE. CONTACT ADDRESS: No. 418(608), K.K.S. ROAD, JAFFNA. T.P. No.: 222 3665 (32030)

பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும் பிறீமா இன சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும் 21.05.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P. No.: 3529, 2867 ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
(32027)

## மணமகள் தேவை

யாழ். நகரில் சொந்தக் கடை நடத்தும், படித்த, சைவ போசன மணமகனுக்கு படித்த, சைவபோசன, 35 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. தொடர்பு, விள.இல. 2266, மே/பா உதயன்.
(32020)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1964 இல் பிறந்த, 7இல் செவ்வாய் 60 கிரக பாவமுள்ள, அரச உத்தியோகம் பார்க்கும் M.A. பட்டதாரியான மணமகளுக்குப் பொருத்தமான டாக்டர், பொறியியலாளர், கணக்காளர், ஆசிரியர், தனியார் நிறுவன உரிமையாளர் போன்ற தகுதிவாய்ந்த 40-43 வயதுள்ள மணமகன் தேவை. சாதகம் மற்றும் முழு விரைத்துடன் தொடர்புகொள்க. விளம்பர இல: 2262, மே/பா, உதயன்.
(31884)

## பரிசு நாளும் ஸ்தாபகர் நினைவுப் பேருரையும்

யாழ்ப்பாணம்,மே17

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் பரிசு நாளும் ஸ்தாபகர் நினைவு நாளும் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.2.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் திருமதி ப.சோதிலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன. பிரதம விருந்தினராக சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக மூளாய் கிராம சேவையாளர் சு.வைத்தியநாதனும் கலந்துகொள்வர்.

ஸ்தாபகர் நினைவுப் பேருரையை இளைப்பாறிய கோட்டக் கல்வி அதிகாரி சு.தற்பரானந்தம் நிகழ்த்தவுள்ளார். (ஐ-28)





முதன் முறையாக

தொழிற்சாலையின்

5 வருட உத்தரவாதம்

License No : 50445

BS No : 5412 1996
License No : KM41240

ஏக முகவர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337253-5
பெக்ஸ்: 2446554

WATERTEC
Simply Better
முத்திரையை அவதானியுங்கள்

Access Graphics

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



எமது சக நண்பனும் தற்போது பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியற் பீடத்தில் போதனாசிரியராகப் பணிபுரிபவருமான இ.ரகுமாறன் அவர்களின் அன்புத் தந்தையார்

**மூத்ததம்பி இராசையா** அவர்கள்

16.05.2004 இயற்கையெய்தியமையையிட்டு நாம் மிகவும் மனம் வருந்துவதோடு, எமது கண்ணீர்ப் பூக்களையும் காணிக்கையாக்குகின்றோம்.

E-99 நண்பர்கள்,
பொறியியல் பீடம்,
(32036) (24) பேராதனைப் பல்கலைக்கழகம்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1956 - 10 - 04 | 2002 - 09 - 06 |

**சிவஞானம் நித்தியானந்தம்** (ஆனந்தம்)

(மினிபஸ் உரிமையாளரும், லட்சுமி ஸ்ரோர் உரிமையாளரும், வர்த்தக சங்கத்தின் முன்னாள் தலைவரும், யாழ்.மாவட்ட வர்த்தக சம்மேளனத்தின் உபதலைவரும்)

திதி: 17-05-2004

*அன்பால் அள்ளி அணைத்து*
*அறிவால் உயர வைத்து*
*பண்புடன் வாழ வைத்த எம் உத்தமரே!*
*ஊர் போற்றும் உயர்ந்தவரே!*
*எம்மை தவிக்கவிட்டுச் சென்று*
*இரண்டாண்டுகள் ஆகுதப்பா*
*உங்கள் உடல் மறைந்தாலும்*
*உங்கள் நினைவுகள் நெஞ்சில் நிலைத்திருக்கும்:*

சண்டிலிப்பாய். **மனைவி, பிள்ளைகள்.**

(32028) (26-16-24)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சுப்பிரமணியம் சரவணபவானந்தன்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1971.06.30 | 2000~05~17 |

உதிரத்தை உரமாக்கி உழைத்து
எம்மை உயரவைத்து
வாழ்விலும் தாழ்விலும் எம்முடனே
பாசவிளக்காய் ஒளிர்ந்தவனே!
சிரிக்கின்ற உன் அன்பு உள்ளங்கள் எல்லாம்
கண்ணீர் வடித்திடவே - நீ
ஒரு வார்த்தை கூறாமல்
விண்ணுலகு சென்றுவிட்டாய்?
ஒவ்வொன்றாய் ஆண்டுகள்
நான்கு ஓடிமறைந்தாலும்
ஓயாதய்யா எம் மனத்தில்
நாளும் உன் நினைவுகள்!

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!*

என்றும் உன் நினைவில் வாழும்:
அப்பா, அம்மா, அண்ணாமார்
நாகேந்திரம், ரவி, தம்பி கஜன்,
அண்ணிமார், பிள்ளைகள்.

கைதடி மேற்கு,
கைதடி. (32031) (24-16)

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரான
கொக்குவில் மேற்கைச் சேர்ந்த

**சுப்பிரமணியம் பூபாலசிங்கம்**

அவர்கள் 16.05.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானதையிட்டு நாம் மிகுந்த வேதனையும் துயரமும் அடைகின்றோம்.

அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

"சாரதா பவனம்"
வராஹி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (32040) (24-16-18)

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# தொண்டைமானாறு நன்னீரேரித் திட்டம் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பாகுமா?

## திட்டத்தை மறு ஆய்வு செய்ய உலக வங்கி முடிவு

தொண்டைமானாறில் உவர் நீரை நன்னீராக்கும் பாரிய திட்டத்தை மறு ஆய்வு செய்வது என்று உலக வங்கி முடிவு செய்துள்ளது.

இத்திட்டத்தை மேற்கொள்வதற்காக பெரிய அளவில் நிதி உதவிகளை வழங்க உலக வங்கி முன்வந்தது. அதையடுத்து, இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கான முன்மொழிவுகளை யாழ். செயலகம் தயாரித்து வழங்கியிருந்தது.

ஆனால், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதால், சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் என்று சில தரப்புகளிலிருந்து முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. இதையடுத்து, சுற்றுச் சூழல் பாதிப்புத் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை ஒன்றை வழங்கும்படி பல்கலைக்கழக நிபுணர்களை உலக வங்கி கேட்டிருந்தது. அதன்படி பல்கலைக்கழக நிபுணர்கள் அறிக்கை ஒன்றைத் தயாரித்து சமர்ப்பித்திருந்தனர்.

சுற்றுச்சுழல் பாதிப்புத் தொடர்பாக தெளிவான விளக்கம் எதுவும் அறிக்கையில் காணப்படவில்லை என்று தெரிவித்து, திட்டத்தை மறு ஆய்வு செய்ய உலக வங்கி முடிவு செய்துள்ளது - என்று அறியவருகிறது.

வெளிநாட்டு நிபுணர்களை இந்த ஆய்வுப் பணியில் ஈடுபடுத்தி, சுற்றுச் சூழல் பாதிப்புக் குறித்து சரிவர அறிந்த பின்னரே திட்டத்தை நடைமுறைப்படுத்துவதா? இல்லையா என்பது குறித்து உலக வங்கி முடிவு செய்யும் என்றும் அறியவந்தது.(ஐ-3)

# எம்.பியாக அரியநேந்திரன் செவ்வாயன்று பதவியேற்பு

கொழும்பு,மே17

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக பாக்கியசெல்வம் அரியநேந்திரன் நாளை செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்கவிருக்கின்றார்.

நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட கிங்ஸ்லி இராஜநாயகம் தமது பதவியை ராஜினாமாச் செய்யும் கடிதத்தை நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கடந்த வாரம் நேரடியாகச் சமர்ப்பித்திருந்தார்.

இதை ஏற்றுக்கொண்ட அவர், பட்டியலில் உள்ள அடுத்த உறுப்பினரின் விவரத்தை அனுப்பும்படி மட்டக்களப்பு உதவித் தேர்தல் ஆணையாளரைக் கேட்டுக்கொண்டார்.

பட்டியலில் கிங்ஸ்லி இராஜநாயகத்துக்கு அடுத்த நிலையிலுள்ள பா. அரியநேந்திரனின் பெயரை உதவித் தேர்தல் ஆணையாளர் சிபார்சு செய்து நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு நேற்று முன்தினம் அனுப்பியுள்ளார்.

இது தொடர்பான விவரம் வர்த்தமானியில் இன்று வெளியிடப்படும் என்றும் - அதையடுத்து அவர் நாளை செவ்வாய்க்கிழமை சத்தியப்பிரமாணம் செய்வார் என்றும் - கூட்டமைப்புப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (ஐ-3)

# கதிர்காமர் வெளியிடும் கருத்துக்களால் அரசின் போக்கு மீது மக்கள் சந்தேகம்

## ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. அறிக்கை

கொழும்பு,மே17

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான திகதி, இடம் தொடர்பான அறிவிப்பு வெளிவரும் என எதிர்பார்க்கப்படும் நேரத்தில், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளியிட்டுவரும் கருத்துக்கள் அரசு மீது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. எனவே, தனது அரசு தெளிவான நிலைப்பாட்டை வெளியிடவேண்டும்.

- தமிழ்க்கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

சந்திரிகா அரசின் போக்குக் குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு கூறியிருக்கிறார்.

அவர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான திகதி மற்றும் இடம் தொடர்பான விவரங்கள் எந்த நேரத்திலும் வெளிவரும் என்பது மக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

இந்நிலையில், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளியிட்டுவரும் கருத்துக்கள் அரசின் நிலைப்பாடு தொடர்பாகச் சந்தேகங்களை மக்கள் மத்தியில் எழுப்பியுள்ளன.

இந்தியாவில் காங்கிரஸ் கட்சி பதவி ஏற்கமுன்பே, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்தியாவுக்கு நாடு கடத்தும்படி அந்த அரசு கோரும் என்று கதிர்காமர் முன்மொழிந்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபை யோசனையை பேச்சின் முதலில் ஆராயத்தயார் என அரசு அறிவித்துள்ளது. ஆனால, தமிழீழத்துக்கான அடிப்படையே இடைக்கால யோசனை என்று கதிர்காமர் அமெரிக்காவில் கூறியுள்ளார்.

இக்கருத்துக்களை நோக்கும் போது, இதயசுத்தியுடன் அரசு பேச்சில் ஈடுபடுகின்றதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

எனவே, பேச்சுடன் முயற்சிகள் இதயசுத்தியுடன் மேற்கொள்ளப்படுகின்றதா என்பது குறித்த தெளிவான நிலைப்பாட்டை அரசு வெளியிட வேண்டும் - என்றார் அவர். (ஐ-3)

# மீள்குடியமர்வு தொடர்பாக இன்று அமைச்சில் மாநாடு

வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக உயர்மட்ட மாநாடு ஒன்று இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு, நல்லிணக்க அமைச்சு அலுவலகத்தில் அந்த அமைச்சின் செயலாளர் எம்எஸ்ஜெயசிங்க தலைமையில் இந்த மாநாடு கூட்டப்படுகிறது.

வடக்கு - கிழக்கில் பணிபுரியும் அரச அதிபர்கள் மற்றும் அதிகாரிகள் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த அமைச்சின் பணிப்பாளர் ஹரீம் பீரிஸ் மற்றும் புனர்வாழ்வுடன் தொடர்புடைய அமைச்சுக்களின் அதிகாரிகளும் இதில் கலந்துகொள்கின்றனர்.

அடுத்த ஆறுமாத காலத்துக்குள், இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தும் ஜனாதிபதியின் செயற்றிட்டத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது, இந்த செயறறிட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள், தடைகள் தொடர்பாக இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்படும் எனத் தெரிகின்றது.

மக்களின் மீள்குடியமர்வுக்கு தடையாகப் பாதுகாப்பு வலயங்கள் இருக்குமாயின், அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்தும் அங்கு ஆராயப்படவிருக்கின்றது. (ஐ-3)

# அரசுக்கு ஆதரவு வேண்டாம்; இ.தொ.காவுக்கு அழுத்தம்

அரசுக்கு ஆதரவு வழங்கக்கூடாது என்று இ.தொ.காவின் தலைமைக்கு அதன் அமைப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இ.தொ.காவின் செயற்குழுக் கூட்டம் கட்சியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அச்சமயம் இக்கோரிக்கையைக் கட்சியின் பெரும்பான்மையான அமைப்பாளர்கள் முன்வைத்துள்ளனர்.

கட்சியின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் இருநூறுக்கு மேற்பட்ட அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர். கடந்த காலங்களில் ஐ.தே.கட்சியுடன் இ.தொ.கா. இணைந்திருந்த சமயம் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பல நன்மைகள் கிட்டியுள்ளன என்றும் - அரசுடன் இணைந்து கொண்டால் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் உரிய இடம் கிடைக்க வாய்ப்புக் கிடைக்காது என்றும் -

அமைப்பாளர்கள் சுட்டிக்காட்டினர். சிறுபான்மை அரசுக்கு ஆதரவு வழங்கி, அரசு தோல்வியடைந்து மீண்டும் தேர்தல் வரும் கட்டத்தில் கட்சி தனது செல்வாக்கை நிலைநாட்டக் கூடிய நிலைமை ஏற்படாது என்றும் -

ஜே.வி.பி. பங்காளியாகக் கொண்ட அரசுக்கு ஆதரவு வழங்குவது தோட்டத் தொழிலாளர்களுக்கு செய்யும் துரோகமாக இருக்கும் என்றும் - அமைப்பாளர்கள் சுட்டிக்காட்டினர். (ஐ-3)

# ஆலயத்துக்கு புலி வாகனம்

நீர்வேலி,மே17

சுன்னாகம் ஐயனார் கோவிலுக்கு சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் புலிவாகனம் ஒன்று உருவாக்கப்படுகிறது. பாயும் நிலையில் செய்யப்படும் இவ்வாகனம் 14 அடி நீளமும, 5 அடி உயரமும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புலி வாகனத்தை நீர்வேலி வடக்கைச் சேர்ந்த பிரபல சிற்பாச்சாரியார் பொ.சத்தியநாதன் உருவாக்கியுள்ளார். இப் புதிய வாகனம் இம்மாதம் 24ஆம் திகதி திங்கட் கிழமை கோயிலுக்கு வழங்கப்படவுள்ளது. (ஐ-110)

# உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மே17

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.45 மணிமுதல் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.45 மணி - பாரதி வி.க. எதிர் கொய்யாத்தோட்டம் வி.க.

★ மாலை 5 மணி பாடுமீன் வி.க. எதிர் பொற்பதி வி.க. (ஐ-5)

# கல்விச்சாலைக் காட்சிகள்



சுழிபுரம் கிழக்கு அமெரிக்கமிஷன் பாடசாலைக்கு விளையாட்டு மைதான நிலத்தை சகாய விலையில் கிடைக்கச்செய்த திருமதி தபோதினி கெங்காதரம்பிள்ளை, வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனால் மாலை அணிவிக்கப்பட்டபின் எடுக்கப்பட்ட படம். பாடசாலை அதிபர் திருமதி செல்லையா மற்றும் விருந்தினர்களும் படத்தில் உள்ளனர்.

*(படம்: சுழிபுரம் செய்தியாளர்)*



வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகளை வித்தியாலய அதிபர் திருமதி வி.நாவேந்தன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேற்படி பாடசாலையின் முன்னாள் அதிபர் மு.திருஞானசம்பந்தபிள்ளையும், அவருடைய பாரியாரும் அருகில் உள்ளனர். (எ)



நல்லூர்மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட திருமதி இ.வாமதேவன், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், வலி. வடக்குப் பிரதேச செயலாளர் கலாநிதி க.குணராஜா, யாழ். மாவட்ட அரசியல்துறையைச்சேர்ந்த பொ.ஈஸ்வரன் ஆகியோரை அதிபர் திருமதி க.குணராசா, உப அதிபர் ஆ.பாலகுமார் ஆகியோர் அழைத்து வருவதைப் படத்தில் காணலாம். (10)



கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயத்தின் இல்லமெய்வன்மைப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.அருணகிரிராஜா, சிறப்பு விருந்தினர் வண. பிதா எட்வின் வசந்தராஜா அடிகள் ஆகியோர் அதிபர் மா.ஞானப்பிரகாசம், உடற்கல்விப் பொறுப்பாசிரியர் பீற்றர் தர்மநாயகம் ஆகியோரால் அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: குருநகர் செய்தியாளர்)*

**PERX Computer Hard Ware Accessaries**

வடக்கு கிழக்கின் ஏக விநியோகஸ்தர்கள்
**NORTH EAST TECHNOLOGIES (NET)**

**Perx**™
PERFORMANCE WITH EXCELLENCE
**NEW GENERATION COMPUTER PRODUCTS**




Perx Monitors, Perx Casing,
Perx Branded Key Board,
Optical Mouse and 3D Speakers,
Perx UPS and More

**மொத்தமாகப் பெற்றுக்கொள்பவர்களுக்கு விசேட கழிவுகள்**

**யாழ்.மாவட்ட உப முகவர்களாக விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்.**

P-IV - 2.4 Ghz, 128 DDR Ram, 40GB HDD,
Perx Tower Casing, Perx Branded
Key Board, Mouse and Perx Speakers with
Perx UPS Free.

Perx Products களைத் தவணை முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தம்புதியதும் மீளமைக்கப்பட்ட கணனிகளும்,
கையடக்கத் தொலைபேசிகளின் விற்பனை,
திருத்தவேலைகள் UnLocking வசதிகள்,
Net Working, LAN, WAN, SOHA,
Net 2 Phone, ஆலோசனைகளுக்கு,

**வட கிழக்குத் தொழில் நுட்பம்**

**NORTH EAST TECHNOLOGIES (NET)**
NO. 34, SADDANATHAR ROAD, NALLUR, JAFFNA.
T.P :-021-2223786 & 0777-708498 (Hot line)

(C/35035)(40-13-14)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| அன்னையின் மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 14 |  | 17 |
| 08 | | 04 |
| 1952 | | 2004 |

திருமதி
### விஜயலட்சுமி தங்கராசா

**(தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)**

தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்து தன்னையே அர்ப்பணித்த அன்னையே! ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (17.05.2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*320/1, A.V. றோட்,*
*அரியாலை, யாழப்பாணம்.*

-குடும்பத்தினர்.

(32042)(38-11-16)

## ஓராண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 16 - 04 - 1936 |  | 29 - 05 - 2003 |

அமரர் **வீரவாகு முருகையா**
**(கோண்டாவில்)**

ஓராண்டு ஆகியும் ஓயவில்லை எம் துயரம்
ஓராயிரம் ஆண்டாகினாலும் மறவாது எம் இதயம்
ஆறாத துயர் தந்து எம் ஆவி துடித்திடவே
ஐயாவா எங்கு நீர் சென்றீரோ

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

**மனைவி, மக்கள்**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

(32045)(40-11-16)

## கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில்
# பழிவாங்கும் நோக்கில் இடமாற்றம்; மனித உரிமை மீறல் என முறைப்பாடு

பழிவாங்கும் நோக்குடன் முறைகேடான விதத்தில் தனக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்து ஆசிரியர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருக்கிறார்.

யாழ். கல்வி வலயத்தில் கோப்பாய்க் கோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றம் தொடர்பாகவே இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

33 வருடங்கள் ஆசிரியர் சேவையைப் பூர்த்தி செய்த 53 வயதான சம்பந்தப்பட்ட ஆசிரியர் பொருத்தமான காரணங்களின்றி தனது அடிப்படை உரிமைகளை மீறும் விதத்தில் பழிவாங்கல் இடமாற்றம் வழங்கப்பட்டிருப்பதாக தனது முறைப்பாட்டில் தெரிவித்திருக்கிறார்.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராகச் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டின் ஏற்றுக்கொண்டுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (ஐ)

### பரிபாலன சபையின் மணிவிழா

தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில் தர்ம பரிபாலன சபையின் மணிவிழா எதிர்வரும் 23 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில்முன்றிலில் நடைபெறவுள்ளது. இவ்விழாவை முன்னிட்டு 60 பக்கங்களில் மணிவிழா மலர் ஒன்று வெளியிடப்படும். (எ-173)

# மணல் ஏற்றிய உழவு இயந்திரத்தில் ஒரு கோடி பெறுமதியான ஆயுதங்கள்

முருங்கன், மே17

மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரமொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பல்வேறு வகையான ஆயுதங்கள் கடந்த வியாழக்கிழமை முருங்கன் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சீனாவில் 2002ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டதாகக் கருதப்படும் மோட்டார்கள், பிஸ்ரல்களுக்குப் பயன்படுத்தப்படும் பெருமளவு ரவைகள் மற்றும் 680 ரவைக்கூடுகள் உட்பட வெவ்வேறு வகையான ஆயுதங்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி சுமார் ஒருகோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய உழவு இயந்திரச் சாரதி கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ளதுடன், உழவு இயந்திரமும் வவுனியாவிற்கு எடுத்துவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கமநல கேந்திர நிலையம் நிறுவக் காணி

யாழ்ப்பாணம்,மே17

சண்டிலிப்பாய் இரட்டையர் புலம் வைரவர் கோயிலுக்கு அருகில் கமநல கேந்திர நிலையம் அமைக்கப்படவுள்ளது. இதற்கென 4 பரப்புக் காணி அன்பளிப்பாக கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் பணிமனைக்கு வழங்கப்பட்டுள்ளது. (ஐ-185)

## மாகாண கரபந்தாட்டப் போட்டியில்
# ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் பருத்தித்துறை ஐ.வி.க. அணியும் சம்பியன்

யாழ்ப்பாணம்,மே17

யாழ் மாவட்ட கரபந்தாட்டச்சங்கம் வடமாகாண ரீதியாக நடத்திய கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞ் விளையாட்டுச் கழகமும், பெண்கள் பிரிவில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இவ்வருட சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் சங்க மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு மின் ஒளியில் இடம்பெற்றன.

முதலில் நடைபெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும், யாழ், பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞானப்பிரிவு அணியினரும மோதினர். இதில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 2-0 என்ற நேர்செற் கணக்கில் வென்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

அடுத்து நடைபெற்ற ஆண்களுக்கான போட்டியின் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும், அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக்கழகமும் மோதின. இதில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் 2-1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது.

இறுதியாக நடைபெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக கழகமும் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 3-0 என்ற நேர் செற் கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று இவ்வருட சம்பியனாகிறது.

ஆட்டத்தின் சிறந்த வீரராக ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த பழனி தெரிவு செய்யப்பட்டார்.

கரபந்தாட்டச் சங்கம் நடத்திய சுற்றுப் போட்டிகளில் கடந்த இரண்டு வருடங்கள் தொடர்ச்சியாக ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது. (ஐ-5-190)


### வேலைக்கு ஆள் தேவை

*வீடியோ கடையில் வேலை செய்யத் தகுதிவாய்ந்த பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும்.*

தொடர்புகளுக்கு:
**பா.வசந்தன்**
ஆராதனா ஆடியோ. வீடியோ விஷன்.
இல.05, நவீன சந்தை மேல்மாடி,
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.

(சி-31998)

**கந்தபுராண வள்ளியம்மன் படன நூல்**
**மூலம் உரையுடன்**
கோவில் புராண படன தேவைக்கு உதவுகின்றோம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:
செயலாளர்,
பஜனை சபை,
வழக்கம்பரை, சுழிபுரம்.

(C35033)(40-11-17-26)


## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் பூபாலசிங்கம்



கொக்குவில் மேற்கு, வராஹி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் பூபாலசிங்கம் நேற்று (16-05-2004) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும் சாரதா தேவியின் அருமைக் கணவரும் குணசீலன் (ரவி - சுவிஸ்), வத்சலா (இந்தியா), வசந்தன் (இந்தியா), சத்தியசீலன் (ரகு - சுவிஸ்), சசிகலா (கனடா), ஜெயசீலன் (சீலன் - சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் வாசுகி (சுவிஸ்), தர்மராசா (இந்தியா), சந்திரவதனி (ராதா - இந்தியா), சுமதி (இந்தியா), நவபாலன் (கனடா), சாரா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமானாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (19-05-2004) புதன்கிழமை 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் இந்துமாயனத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சாரதாபவனம்,*
*வராஹி அம்மன் கோயிலடி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

(32039)(26-11-17)

தகவல்:
**வசந்தன் *(மகன்)*.**
T.P.: 077 6257930.

### விசுவநாதர் சுப்பிரமணியம்

(இளைப்பாறிய ஆசிரியர், அதிபர், சமாதான நீதிவான்)



நெடுந்தீவு மத்தியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட விசுவநாதர் சுப்பிரமணியம் அவர்கள் 15-05-2004 சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் திருமதி சொர்ணம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற விசுவநாதர்- நாகமுத்து தம்பதிகளின் ஏகபுதல்வனும் காலஞ்சென்ற குமாரசாமி - நாகமுத்து தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை இரட்ணராசா அவர்களின் அன்புச் சகோதரரும் அம்பிகை (லண்டன்), கலாதேவி, நிர்மலாதேவி (பிரான்ஸ்), சத்தியமூர்த்தி (பிரான்ஸ்), சாந்தமூர்த்தி (லண்டன்), சாரதாதேவி (கனடா), Dr.சிவபாதமூர்த்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகாலிங்கசிவம் (மாலி - லண்டன்), புலேந்திரன், சிறிஸ்கந்தராசா (பிரான்ஸ்), நகுலேஸ்வரி (பிரான்ஸ்), ராதிகா (லண்டன்), பாலராசா (கனடா) ஆகியோரின் அன்பு மாமாவும் வியாசன், சேந்தன், டிலோசனா, சபேசன், சஞ்சயன், சதுர்ஜன், சங்கீதா, சேரன், விசாலி, மாதங்கி ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

37, அருத்துசா வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06,
தொலைபேசி 0112 - 581238.

(C/35032) (26-11-17)

தகவல்:
Dr.சு.சிவபாதமூர்த்தி *(மகன்)*.

# போரின் பின்னர் ஜப்பான் வளர்ந்ததுபோல எமது நாடும் அபிவிருத்தி காணவேண்டும்

## கிளிநொச்சி ஆஸ்பத்திரி வைபவத்தில் உரை

கிளிநொச்சி, மே17

இரண்டாம் உலக மகாயுத்தத்தின போது ஜப்பானின் நகரங்கள் எவ்வாறு அழிவடைந்ததோ அவ்வாறுதான ஈழத்திலும் கடந்த 20வருடங்களாக எமது தமிழ்த்தேசமும் அழிக்கப்பட்டது.

உலகப் போருக்குப் பின்னர் ஜப்பான் எவ்வாறு அபிவிருத்தியடைந்ததோ அதுபோலவே எமது பகுதிகளும் அபிவிருத்தியடைய வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி வைத்தியசாலையில் பணியாற்றும வைத்திய கலாநிதி பா.யூடிரமேஸ் ஜெயக்குமார்.

கிளிநொச்சி வைத்தியசாலையில ஜப்பான் நாட்டு அரசு வழங்கிய நிதியுதவியில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியின் திறப்புவிழா கடந்த 12ஆம் திகதி இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவா தெரிவித்ததாவது:-

சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளை பெரும்பான்மை சமூகம் பூர்த்தி செய்யாத நிலையில் எமது முன்னைய அரசியல் வாதிகளின் அகிம்சைப் போராட்டங்கள் எல்லாம் தோற்றுப்போயின.

கடந்த 2தசாப்தங்களாக எமது இளைஞர்களின் வீரம் செறிந்த போராட்டத்தாலும் கிடைத்த இராணுவ வெற்றிகளின் பின்னணியிலும் இன்று போர் நிறுத்த உடன்பாடு, அரசியல் பேச்சுக்கள் தோன்றிய இவ்வாறான காலகட்டத்தில் - பெரும்பான்மை அரச உயரதிகாரிகள் ஏனைய எல்லா உயர்மட்ட பிரதிநிதிகளும் இங்கிருக்கின்ற இச்சூழலில் இவ்வைத்தியசாலை கட்டடத் தொகுதியைத் திறப்பதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது எவ்வாறான சிறோசிமா, நாகசாகி பட்டணங்கள் அழிந்து போனதோ அவ்வாறான ஒரு சூழலில் கடந்த 20 ஆண்டுகளாக போரில் பெரும்பாலான தமிழ்ப் பகுதியில் ஏற்பட்டது.

ஜப்பானிய மக்களின் கடும் உழைப்பிலும் அவர்கள் சிந்திய வியர்வையிலும் இன்று ஜப்பான் தேசம் நவீனமாகக் கட்டப்பட்டு உலகிலேயே முதல்தர தொழில்நுட்ப விருத்தி கொண்ட வல்லரசாக நிமிர்ந்து நிற்கின்றது.

இதேபோன்ற எமது தேசமும் மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இது மீண்டும் ஒரு யுத்தத்திற்கு பின்னர் அல்ல, இந்த சமாதான சூழ்நிலை நீடித்து நிலைத்து அதன் மூலம் கட்டப்பட வேண்டும்.

தமிழ்த்தரப்பின் அபிலாஷைகளை பூரணமாகப் பூர்த்தி செய்கின்ற அனைத்து அதிகாரங்களுடனும் கூடிய தீர்வுத் திட்டம் ஒன்றைப் பெற்றுத்தர சர்வதேச பிரதிநிதிகளும், ஜப்பானிய அரசும பெரும்பான்மை அரச உயரதிகாரிகளுடன் ஏனையோரும் தூண்டுதலாக இருக்கவேண்டும்.

ஜப்பானிய அரசு தனது நாட்டு மக்களினதும் அரசினதும் தொழில்நுட்ப அடையாளமாக, ஜப்பானிய மககளின் நெற்றிவியர்வை நிலத்தில் சிந்தி உழைத்த உழைப்பின் வரிப் பணத்தைக் கொண்டே 55மில்லியன் ரூபா செலவில் இக்கட்டடத்தொகுதியை கட்டித்தந்துள்ளது.

இக்கட்டடத்தொகுதி பன்நெடுங் காலம் நிலைத்து நிற்க வேண்டுமென்றால் எமது பகுதிகளில் சமாதானம் நிலைத்து நிற்க வேண்டும். மீண்டுமொரு யுத்தம் தவிர்க்கப்பட வேண்டும்


இரண்டு ஆண்டு நிறைவை முன்னிட்டு
விசேட விலைக்கழிவு விற்பனை

இன்று 17.05.2004 திங்கட்கிழமை முதல்
22.05.2004 சனிக்கிழமை வரை

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

முகூர்த்தப்பட்டுப்புடவைகள், நவநாகரிக டிசைன் சாறி வகைகள், துணிமணிகள், சேட், சூட் போன்ற இன்னும் பல உங்களுக்காகவே காத்திருக்கின்றன!

தாமதிக்கவேண்டாம்! இன்றே விரையுங்கள்!

நவீன பாணிகள் அறிமுகஞ்செய்யப்படுகின்றன!
கொள்வனவு செய்பவர்களுக்கு நன்கொடைகள் உண்டு.

மில்லேனியம் பெஷன் அன் பொம்பே பஜார்
இல.10,11 பெரியகடை (மலேயன்கபே முன்பாக)
யாழ்ப்பாணம். T.P.021-4590174
(முற்றிலும் குளிரூட்டப்பட்ட விற்பனை நிலையம்)
(C/35401)(36-13-17)


## பிற்போடப்பட்டுள்ளது



### அமரர் வைத்திலிங்கம் பூபாலசிங்கம்

அவர்களின் அன்புச் சகோதரியின் மகள் குமாரதாஸ் விஜயகௌரியின் அகால மரணத்தையிட்டு நாளை (18.05.2004) செவ்வாய்க்கிழமையும் 20.05.2004 வியாழக் கிழமையும் இடம் பெற இருந்த அந்தி யேட்டி, வீட்டுக் கிரியைகள் யாவும் பிற்போடப்பட்டுள்ளது.

*சிவன் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*
(32051)(37-17-13-36)

தகவல்:
இசைஞானவதி (வேவி)
(மனைவி).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*தோற்றம்* 19 - 05 - 1922



*மறைவு* 29 - 05 - 2003

### திருமதி சின்னையா இரத்தினம்

**திதி: திரயோதசி (திங்கட்கிழமை)**

*அன்புக்கோர் அணிகலனாய் பண்புக்கோர் இருப்பிடமாய்*
*பாரினிலே வாழ்ந்து மறைந்த எங்கள் அன்புத் தெய்வமே!*
*ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவு*
*என்றும் எமது நெஞ்சங்களில் நிறைந்தே இருக்கும்.*

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
சுந்தரலிங்கம் (ஜேர்மனி),
மற்றும் மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*கோண்டாவில் றோட்,*
*இருபாலை.(32052)(37-13-17-36)*


உடன் விற்பனைக்கு

226-xxxx தொடர் இலக்கமுடைய டீசல் டெலிக்கா mmc மொடல் சகல ஆவணங்களுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077-6327627
0777-242636
(32053)

உயர்கல்வி நிறுவனம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
GAQ, B.A. Part I-2004
Paper Classes, GAQ, B.A. Part I - 2003
ஆரம்பம்: திங்கள் 9.30.
வெள்ளி 9.30.
ஆசிரியர்: K.நிஷாந்தன். (32037)(37)

ராஜா யாழ்ப்பாணம்
5 ஆவது வெற்றி வாரமாக இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
விஜய், த்ரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த
10.30., 2.30, 6.30, 9.30 (பு.நே.)






21 ஆம் திகதி முதல்
(ரீல்ஸ்) ஆய்த எழுத்து
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல், விஜயகாந்,கனகா, செந்தில் நடித்த





கோயில் காளை
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி சனி ஞாயிறு இரவு 8.45 இரத (பு.நே)
SLIVER
(c/34421)(36)

லக்சுமி இனுவில்
இரண்டாவது வெற்றிவாரம்...
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
சூரியா (2 வேடங்களில்), ஜோதிகா நடித்து மிகப் பிரமாண்டமான தயாரிப்பில





பேரழகன் (ரீல்ஸ்)
தினசரி :11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)
ஆசனப் பதிவுகளுக்கு: இணுவில் - லக்சுமி சினிமா
யாழில் - செல்வா மினி.
(32046)(12)

நாகம்ஸ் சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினத்தில் டொல்பி ஒலி அமைப்புடன்
மூன்றாவது வெற்றிவாரம்
விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேல் நடித்த





அருள்
காட்சி நேரம்:
11.00, 3.00, 7.00 (பு.நே.)
மே 7 முதல் அருள் திரைப்படம் திரையிடப்படும் இறுதித் திகதி வரை நுழைவுச்சீட்டுக்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்! குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு பெறுமதிமிக்க பரிசுகள்.
1) துவிச்சக்கரவண்டி
2) C.D பிளேயர்
3) மேசை மின்விசிறி
(C34180)(22)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி விஜயகௌரி குமாரதாஸ்



இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட (அண்ணா பாம் அருகில்) திருமதி குமாரதாஸ் விஜயகௌரி 16.05.2004 அன்று அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் அமரசிங்கம் குமாரதாஸின் அன்பு மனைவியும் கதீசன், வரசுதன் ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் இராஜேஸ்வரியின் அன்பு மகளும் ஜெய சேகரன், ஞானசேகரன் (ஜேர்மனி), ஜெயகௌரி (கனடா), சிவகௌரி, ஆனந்த சேகரன் (கனடா), ஆனந்தகௌரி, தேவகௌரி ஆகியோரின் அன்புச்சகோதரி யும் சந்திரகலா, சிவசக்தி (ஜேர்மனி), சிவகுப்தா (கனடா), இராமகிருஷ்ணன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2004) திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு இணுவில அண்ணா பாம் அருகில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, இணுவில் பூவோடை இந்து மயானத்தில் நல்லடக்கஞ்செய்யப்படும.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அ.ஜெயசேகரன்*
*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.*
(32050)(37-36-13-17)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி றெபேக்கா போல்

மாகியம்பதி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய திருமதி றெபேக்கா போல் அவர்கள் 15.05.2004 சனிக்கிழமை கனடாவில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் வரப்பிரகாசம் போல் (போல்மாஸ்ரர்) அவர்களின் அன்பு மனைவியும் வரோதயன், ஜெகநாதன், சந்திரவதனா, நீற்றா கமலவேணி, தேவகாந்தன், ஞானோதயன் ஆகியோரின் அருமைத் தாயாரும் செல்வரஞ்சினி, செல்வராணி,வண.பெஞ்சமின் ஜெயராஜா, வரதராஜா, கமலினி, சுபத்ரா ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரகாஷ், பிரபா, ஜோய்ஸன், ஜெரோமி, ஜெருசன், ஏஞ்சலின், மீரா, ராகுலன், ஜோய், ஹரின், பிரலிந், சிவாந்தி, மிதுனன், ஆரத்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக நாளை (18.05.2004) செவ்வாய்க்கிழமை காலை 7.00மணிக்கு மாகியம்பதி புனித செபஸ்தியார் ஆலயத்தில் இரங்கற்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இறையியற் கல்லூரி,*
*மருதனார்மடம.*
(32048)(36-13-17)

தகவல்:
வண.பெஞ்சமின் ஜெயராஜா
(மருமகன்).

## இராமலிங்கம் கணேசலிங்கம்

தாவளை இயற்றாலை, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், புத்தூர் மேற்கு, புத்தூரை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் கணேசலிங்கம் அவர்கள் நேற்று (16.05.2004) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - தெய்வானைப் பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகனும், குப்பிளானைச் சேர்ந்த இரத்தின சிங்கம் - பூமணி (கனடா) தம்பதியினரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற ஜானகியின் அன்புக் கணவரும், கௌசல்யா (கனடா), சுதர்சினி (கனடா), கிருஷென் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற நாகேந்திரராசா, காசிலிங்கம் (சுவிஸ்), கலையரசி (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும் ராஜேஸ்வரி, சுசி (சுவிஸ்), விஜயரட்ணம் (சுவிஸ்) ஆகியோரின மைத்துனரும் கஜன் (சுவிஸ்), விதுர்ஷன் (சுவிஸ்), விதர்சன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் சுபாசினி, சுதாகரன், சுஜந்தினி, சுரேஷ், சுஜந்தன் ஆகியோரின் சிறிய தந்தையும் சாசா (சுவிஸ்),மாஸ்கோ (சுவிஸ்), காவ (சுவிஸ்) ஆகியோரின் பெரியதந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.05.2004) திங்கட்கிழமை பி.பகல் 1மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக புத்தூர் கிந்துசிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*புத்தூர் மேற்கு,*
*புத்தூர்.*
(32049)(36-13-17)

தகவல்:
சிவஞானம் வைஜந்தினி (மைத்துனி),
சிவஞானம் ரவீந்திரன் (பெறாமகன்).

## மூத்ததம்பி இராசையா

பளை, மாசாரைச் சேர்ந்த மூத்ததம்பி இராசையா நேற்று (16.05.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மூத்தம்பி மற்றும் தங்கம்மா ஆகியோரின் அன்புமகனும் நாகர்கோவில் குடாரப்புவைச்சேர்ந்த ம.தியாகராசா, காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும் சுப்புலட்சுமியின் அன்புக்கணவரும், இராகுலன் ரகுமாறன் (பேராதனை பல்கலைகழகம்), அகல்யா ஆகியோரின் அன்புத் தந்தையாருமாவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் தற்காலிக வதிவிடமான புலோலி தெற்கு, பிலாவடித்தெருவில் உள்ள இல்லத்தில் இன்று திங்கட்கிழமை (17.05.2004) பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆனை விழுந்தான் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தற்காலிக முகவரி:*
*பிலாவடித்தெரு,*
*புலோலி தெற்கு,*
*புலோலி.*
(c-35402)(36-13-17)

தகவல்:
இராகுலன் (மகன்).

## சுப்பிரமணியம் சந்திரலலீத் (ரதன்)



வவுனியாவைப் பிறப்பிடமாகவும் ஐந்துசந்தி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சந்திரலலீத் (ரதன்) அவர்கள் நேற்று (16.05.2004) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அகால மரணமானார்.


அன்னார் சுப்பிரமணியம் தங்கம்மாவின் அன்பு மகனும் ஜீவதர்சினியின் அன்புக் கணவரும் தினேஸ்குமாரின் அன்புத் தகப்பனாரும் சாந்தியின் அன்பு மருமகனும் புனிதன், சுரேஸ், ஜீவிதா ஆகியோரின் மைத்துனரும் சுரேக்காவின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2004) செவ்வாய்க்கிழமை நடைபெற்று, பி.ப4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஐந்து சந்தி,*
*யாழ்ப்பாணம்.*
(32054)(36-13-17)

தகவல்:
மனைவி
(ஜீவதர்சினி).



நேற்று அதிகாலை றக்கா வீதிப் பகுதியில் காணப்பட்ட ஆணின் சடலத்தை மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் நேற்றுக்காலை சென்று பார்வையிட்டபோது எடுக்கப்பட்ட படம். (படம்:புஸ்பா)

# பிரதி சபாநாயகர் பதவிக்கான வேட்பாளர்கள் தெரிவு இன்று

நாளை கூடவிருக்கும் நாடாளுமன்றக் கூட்டத்தில் பிரதி சபாநாயகர் ஒருவரை தேர்ந்தெடுப்பது தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளினதும் தலைவர்கள் இன்று நாடாளுமன்றக் குழு அறையில் கூடி இறுதி முடிவு எடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சிறுபான்மைக் கட்சியொன்றின் பிரதிநிதியொருவரை பிரதிச் சபாநாயகர் பதவிக்கு போட்டியிட வைப்பதற்கு அந்த முன்னணி ஆலோசித்து வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. ஜாதிக ஹெல உறுமயவினர் தமது முடிவை நாடாளுமன்றில் இறுதி நேரத்திலேயே எடுப்பர் என அக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதி சபாநாயகர் தெரிவு தொடர்பாக ஆளும் கட்சியின் எம்.பிக்களின கூட்டம் இன்று மாலை ஐந்து மணிக்கு நடைபெறவிருக்கிறது. அதில் அப் பதவிக்குப் போட்டியிடவிருக்கும் வேடபாளர் யார் என்பது அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிரணித் தரப்பில் உள்ள ஓிரு கட்சிகளை வளைத்துப் பிடித்துக் கொண்டு பிரதி சபாநாயகர் பதவியைக் கைப்பற்றி விடுவதில் ஆளும் தரப்பு மிகத் தீவிரமாக இருப்பதாகத தெரிகின்றது.

# தமிழக அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
றக் கழகத்தின் தலைவர் வைகோ., தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் ஆகியோரையும் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினையில், தமிழகத் தலைவர்களின் பங்களிப்பு எந்தளவு முக்கியம் என்பதைப் பற்றித் தெளிவுபடுத்தினார்.

இலங்கை இனப்பிரச்சினை தமிழக அரசியலுக்கு சம்பந்தப்பட்டதல்ல என்ற நோக்கத்தோடு செயற்படுகினற நிலை மாறவேண்டும் என்று சந்திரசேகரன் வலியுறுத்தினார். இலங்கை வாழ் மக்களின் அரசியல் பிரச்சினை நூறு ஆண்டுகாலமாகத் தீர்க்கப்படாமல் உள்ளது என்ற வரலாற்றுப் பின்னணியைப் புரிந்துகொண்டு இந்திய அரசியல்வாதிகள் செயற்படவேண்டும் என்பதும் எடுத்துரைக்கப்பட்டது.

அத்துடன், இந்தக் கருத்து அனைத்து இந்தியத் தலைவர்களிடமும் விளக்கப்படும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

தமிழகத் தலைவர்களுடனான சந்திப்புத் தொடர்பாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - மலையக மக்கள் முன்னணி தூதுக்குழுவினர் தமிழகத் தலைவர்களைச் சந்திப்பது தொடர்பாகவும் புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரனுடன் தாம் சந்தித்து கலந்துரையாடவுள்ளார் எனவும் பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரனுடன் நாடாளுமன்ற உறுப்பினர் பெ.இராதாகிருஷ்ணன், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகர் தினேஷ் வீரக்கொடி ஆகியோர் அடங்கிய மேற்படி தூதுக் குழுவினர் நேற்று பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராம. தாஸையும் சந்திக்கவிருந்தனர் - என்று தெரிவிக்கப்பட்டது. (எ-க)



பெண்கள் அழகுக் கலை நிலையம்
அழகுக்கலை பயிற்சி வகுப்புகள்
★ மணப்பெண் அலங்காரம்
★ கேக் ஐசிங்
★ தையல்
★ சாறி அலங்காரம் செய்தல்
★ பப்றிக் வர்ணம் தீட்டுதல்
★ கிறிஸ்ரல் கல்லில் உருவம் அமைத்தல்
★ பொக்கே வடிவமைத்தலும் மலர் அலங்காரமும்
★ கைப்பணிகள்
புதிய பிரிவு ஆரம்பம் :
19-05-2004 புதன் பி.ப 4.00 மணி
1) மணப்பெண் அலங்காரம்
2) கேக் ஐசிங்
3) சாறிஅலங்காரம் செய்தல்
4) பேசியல்ஸ்
5) கண்ணிமை சீர்செய்தல்
6) வக்ஸிங்
7) பொடுகுச் சிகிச்சை
என்பவற்றை குறைந்த செலவில் தரமான முறையில் செய்து கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்:
ஸ்ரார்
பெண்கள் அழகுக்கலை நிலையம்
No.910.K.K.S., வீதி,
நாச்சிமார்கோவிலடி.
(32035)(32-17-13)

## அகாஷி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அகதிகளை மீள்குடியேற்றம் செய்வதற்கும், சமாதான முயற்சிகள் தொடர்பாகத் தமிழ்மக்களுக்கு இருந்து வருகின்ற அவநம்பிக்கைகளைப் போக்குவதற்கும் இலங்கை அரசு இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபையை உருவாக்கித் தரவேண்டும். அதற்கான அழுத்தத்தை ஜப்பான் கொடுக்க வேண்டும் என இரா.சம்பந்தன், யசூஷி அகாஷியை மேலும் கேட்டுக்கொண்டார்.

இவ்வாறான நிபந்தனைகளின் பேரிலேயே இலங்கை அரசுக்கான நிதியுதவிகளை சர்வதேச சமூகம் வழங்கவேண்டும் எனவும் அகாஷியிடம் சம்பந்தன் கோரிக்கை விடுத்தார். (எ-க)

கம்பியூட்டர் ரைப்செற்றிங்
(காலம் - 3 மாதம்)
O/L - Day class - பிரிவு -II
கணிதம் - 15 மணித்தியாலம்
ஆரம்பம் 18.05.04 8 a.m
THIGAAL
K.K.S., வீதி, இணுவில்.
(32034)

A/L 2004 மாணவர்களே!
வேகமான விற்பனையில் பல்கலைக் கழக அனுமதியை தீர்மானிக்கும்
பொதுச்சாதாரண பரீட்சை வழிகாட்டி
P.உமாசங்கர்
கமல்தாசன்
விலை 140 /-
பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா
சிதம்பரப்பிள்ளை, துர்க்கா
அறிவமுது (வன்னி.)
(31962)

# தமிழ்நாட்டில் மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விருப்பம் எதுவென்பதைப் புரிந்து கொண்டு திருந்திவிடுவார் என்று நம்புகிறோம்.

1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28ஆம் திகதி ராஜீவ் காந்தி அவர்கள் எமது தலைவருடன் பேசி ஓர் உடன்பாட்டுக்கு வரமுனைந்தார். இது சோனியாவுக்கும் தெரியும். எனவே, அவர் அதனை மறந்துவிடமாட்டார் என்றும் உறுதியாக நம்புகிறோம். வரலாற்றுப்பழியைத் தவிர்த்துக்கொள்ளுங்கள் என்று நான் இந்திய ஆளும் வர்க்கத்திடமும், ஜே.வி.பி. போன்ற சிங்கள சக்திகளிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

அதாவது, வெல்லப்போகின்ற தேசத்தினுடைய விதியைத் தடுத்து விடக்கூடிய பழியைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம். இந்தியாவினுடைய குடிமக்கள் மிகப் பெரிய தண்டனையை அரசியல்வாதிகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

ஜே.வி.பியாக இருந்தாலும் சரி இந்தியக் காங்கிரஸாக இருந்தாலும் சரி நாங்கள் கேட்டுக்கொள்வது ஏழைகளை வாழவிடுங்கள் என்றுதான்.

எங்களைப் பற்றிய இந்தியாவின் பார்வையில் நிச்சயமாக மாற்றம் ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். அதற்கு நாங்களும் துணைபோவோம்.

இந்தியாவினுடைய நலன்கள் பாதுகாக்கப்படுவதற்கு இன்றைக்கு இருக்கக்கூடிய கொள்கை உதவாது என்பதை இந்திய அறிஞர்கள் விரைவில் உணர்ந்துகொள்வார்கள்.

புலிகளுடன் பேசுவதற்கு ஊடாக, - எங்களுடைய போராட்டத்தை அங்கீகரிப்பதற்கு ஊடாக - தென்னாசியாவில் மட்டுமல்ல ஆசியாவிலேயே ஒரு போரற்ற சூழலை உருவாக்குவதற்கு இந்தியா முன்வரவேண்டும்.

ஜே.வி.பி.போன்ற சக்திகளும் மனமாற்றமடைந்து இந்தியாவின் மாற்றங்களுடன் இணைந்து மனிதத்தை வாழவைக்கவேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். நிச்சயமாக எங்களுக்கு ஒரு புதிய காலம் விரைவில் மலரும்; அண்மையிலே மலரும். இங்கு ஏற்பட்ட தேர்தல் மாற்றமும் இப்போது ஏற்பட்ட தேர்தல் மாற்றமும் இப்போது இந்தியாவில் ஏற்பட்டிருக்கின்ற மாற்ற மூலம் அதற்கு வழி வகுக்கும் என்று நம்புகிறோம்.

1987ஆம் ஆண்டு ஏற்பட்ட சம்பவங்கள்போல இனிமேலும் எங்களுடைய மண்ணிலே இடம்பெறக்கூடாது. இன்னுமொரு சக்தி வந்து தமது தீர்ப்புக்களை எங்கள் மீது திணிக்கும் போது நாங்கள் எல்லோரும் ஒரே குரலில் நின்று எதிர்ப்போம் - என்று தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுடரினை லெப். அர்ச்சுனாவின் தந்தையான சதாசிவம் ஏற்றி வைத்தார். நிகழ்வுச் சுடரை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் ஏற்றினார். தமிழீழத் தேசியக்கொடியினை சர்வதேச தமிழீழப் பேரவை இணைப்பாளர் கண்ணன் ஏற்றிவைத்தார்.

வரவேற்புரையினை நிதர்சனம் நிறுவனப் பொறுப்பாளர் சேரலாதன் நிகழ்த்தினார். கவிஞர் புதுவை இரத்தினதுரை வெளியீட்டுரை வழங்கினார். நூலுக்கான மதிப்பீட்டுரைகளை யாழ்.பல்கலைக்கழக மெய்யியல் துறைத்தலைவர் பேராசிரியர் சோ. கிருஷ்ணராசா, 'தெரிதல்' சஞ்சிகையின் ஆசிரியர் அ.யேசுராசா, விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமாரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா நூலை வெளியிட்டு வைக்க, முதற்பிரதியினை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பெற்றுக் கொண்டார்.

சிறப்புப் பிரதிகளை யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி வழங்கினார்.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள், சமயப்பெரியார்கள், போராளிகள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். (எ-4)

## றக்கா வீதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சம்பவ இடத்துக்கு நேற்றுக் காலை சென்ற யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சடலத்தைப் பார்வையிட்டார்.

மரணமானவரின் மனைவி மற்றும் தாயாரை அவர் விசாரணை செய்தார்.

சடலத்தை சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் சடலத்தை அவரது மனைவியிடம் கையளிக்கும்படியும்-

சடலத்தை எரிக்காமல் புதைக்க வேண்டும் என்றும் - நீதிவான் உத்தரவிட்டார்.

சடலத்தைப் பார்க்கப் பெரும் எண்ணிக்கையானவர்கள் நேற்று அங்கு கூடியிருந்தனர்.

பிரஸ்தாப சடலத்தைப் பொலீஸார் புகைப்படம் எடுத்ததுடன் வீடியோவிலும் ஒளிப்பதிவு செய்தனர்.

அதேவேளை -

நவரத்தினம் சற்குணராசா(வயது 48 - பொம்மைவெளி), நிக்கலஸ் நிசான்(வயது 22 - ஓட்டுமடம்) ஆகியோரை யாழ். பொலீஸார் தடுத்து வைத்து வாக்குமூலம் பெற்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக வேறு சிலரின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்த பொலீஸார் ஓட்டுமடத்தைச் சேர்ந்த ஒருவரைத் தேடி வருகின்றனர். (எ-3-6-9-15)

# பொது உடன்பாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிளிநொச்சிப் பேச்சுக்களின் விவரங்களை ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தினார்.

ஜனாதிபதியின் பதிலைப் பெற்றுக் கொண்ட பின்னர் விடர் ஹெல்கிஸன் அன்றிரவே நோர்வே புறப்பட்டுச் சென்றார்.

தூதுவர் பிரட்ஸ்கர் அடுத்த நாள் வெள்ளிக்கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து - லண்டனுக்குப் புறப்படவிருந்த - புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கத்தைச் சந்தித்துக் கலந்துரையாடினார். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்த கருத்துக்களை அப்போது அவர் பாலசிங்கத்துக்கு எடுத்துரைத்தார்.

அவற்றைச் செவிமடுத்த மதியுரைஞர் பாலசிங்கம் லண்டன் சென்றடைந்ததும் அங்கிருந்தவாறே இவ்விடயங்கள் குறித்து தலைவர் பிரபாகரனுடன் தொடர்புகொண்டு ஆலோசித்தார் எனத் தெரிகின்றது.

இப்போது ஒஸ்லோ அதிகாரிகள் லண்டனில் உள்ள புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கத்துடனும் கொழும்பில் இலங்கை அரசுத் தரப்பினருடனும் மாறிமாறி ஆலோசனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொது உடன்பாட்டு அறிக்கையை வெளியிடுவதற்கு முன்னர் இணக்கம் காணவேண்டிய சில அடிப்படை விடயங்கள் உள்ளன என்றும் -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்விடயங்களுக்குப் பச்சைக்கொடி காட்டிவிட்டால் அந்த அறிக்கையை உடனடியாக வெளியிடுவதில் தாமதம் ஏதும் இருக்காது என்றும் -

எனவே, நாளை நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னர் அந்த அறிக்கையை ஒஸ்லோ வெளியிடுவதற்கான வாய்ப்பு உண்டா என்பதை உறுதி செய்யமுடியாமல் இருப்பதாகவும் - விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

எது எப்படியென்றாலும் உத்தேச சமாதானப் பேச்சுக்கான இணக்கத்தை வெளிப்படுத்துவது பற்றியதாகவே அந்த அறிக்கை இருக்கும் என்றும்-

பேச்சு நடைபெறும் திகதி, இடம் ஆகியவை பற்றிய விடயங்கள் பின்னரே தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப் படும் என்றும் -

அவை இப்போது வெளியாகக் கூடிய பொது உடன்பாட்டு அறிக்கையில் இடம்பெறா என்றும் - மேலும் தெரியவந்தது.

இதற்கிடையில் -

அண்மைக்காலத்தில் அமெரிக்காவில் வைத்தும், பிற இடங்களில் வைத்தும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும், அமெரிக்கத் தரப்பினரும் இலங்கை விவகாரம் குறித்தும் புலிகள் குறித்தும் வெளியிட்டுவரும் பகிரங்கக் கருத்துக்கள் புலிகளின் தலைமையை விசனத்துக்கு உள்ளாக்கியிருக்கின்றன என்று தெரிகின்றது.

அக்கருத்துக்கள தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கள் ஆக்கபூர்வமான திசையில் நகர்வதற்கு உற்சாகமளிப்பவையாக இல்லை என்றும் புலிகள் கருதுகிறார்கள்.

இவ்விவகாரம் தொடர்பாகத் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் அறிக்கை எதையும் விடுதலைப் புலிகள் வெளியிடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-க)

பிறைற்றின்
சாவகச்சேரி
A/L 2006,2005
பொருளியல்
K.உதயன்
ஆரம்பம்:- 18.05.04
(32043) செவ்வாய் 3.30 p.m

இறைதியான புதுவாழ்வு வழிபாடு
கொழும்பிலிருந்து
சகோதரன் சாள்ஸ் தலைமையில்
பல குருக்கள் பொதுநிலையினர்
ஐம்பதுக்கு மேற்பட்ட இசைக்கலைஞர்களுடன்
நவீன இசைக் கருவிகளோடும்
நவீன ஒலி அமைப்போடும்




உங்களுக்காக செபிக்க வருகின்றார்கள்
22-05-2004 சனிக்கிழமை மாலை 7மணிமுதல் 10மணிவரை
யாழ் மரியன்னை பேராலய திறந்தவெளி அரங்கில்



இன்னிசை மழையில் நனைந்து
இறைவார்த்தையைக் கேட்டு
இறை அனுபவம்பெற்று
புது வாழ்வு காண
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இறைதியான குழுவினர். ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.
விளம்பர அன்பளிப்பு:-
ஆன்மீக விடுதலை பெற்ற ஓர் அடியாள்.
(32047)(32-13-17)

## மரண அறிவித்தல்



### சண்முகம் குணசிங்கம்

(ஓய்வுபெற்ற ப.நோ.கூ.சங்க லிகிதர், நீர்வேலி - மிருதங்க வித்துவான்)

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் குணசிங்கம் அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் அன்னம்மா (நவமணி - ஆசிரியை, கோப்பாய சரவணபவானந்த வித்தியாசாலை) அவர்களின் பாசமிகு கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-05-2004) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் பி.ப 4 மணி அளவில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.
(32055)(32-13-17)
தகவல்:
சி.சயந்தன் (மருமகன் )

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.05.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.